பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 01 திங்கட்கிழமை (16-12-2002)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:20

# உடனடி புனர்வாழ்வுப் பணிகள் பற்றி கிளிநொச்சியில் 6 மணி நேரம் பேச்சு!

## இன்றும் தொடர்ந்து நடக்கும் முடிவுகள் பிற்பகல் அறிவிப்பு

கிளிநொச்சி,டிசெம்பர்16

வடக்கு - கிழக்கில் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டிய மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பான பேச்சுக்கள் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமாகின.

புனர்வாழ்வுப் பணிகளுக்கான வெளிநாட்டு நிதி உதவியைக் கையாள்வது உட்பட முக்கிய பல விடயங்கள் குறித்து நேற்று பேசப்பட்டது. எனினும், தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை. பேச்சுக்கள் இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

பேச்சுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் இன்று பிற்பகல் செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்படும்.

உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான செயற்குழுவின் தலைமைச் செயலகம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டபின்னர் பேச்சுக்கள் பிற்பகல் 2.00 மணியளவில் ஆரம்பமாகின.

நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையில் பேச்சுக்கள் நடந்தன.

பிற்பகலில் ஆரம்பித்த பேச்சு முன்னிரவு வரை தொடர்ந்தது.

பேச்சுக் குழுவில் அரசு தரப்பில் அரசின் சமாதான செயலணிச் செயலாளர் நாயகம் பேர்னாட் குணதிலக, கொள்கை மற்றும் திட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம்.ஐ. ரபீக், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசட் பதியுதீன், எம்.டி.பி.பீரிஸ், எஸ். தென்னக்கோன் ஆகியோர் பங்குபற்றினா.

புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வே.பாலகுமாரன், பூவண்ணன், ஜோய் மகேஸ்வரன், திலக், கௌசிகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைப்புக்கான செயற்குழு தெரிவு, செயலகத்தின் வங்கிக்கணக்கு, அந்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பணிப்பாளராக செல்வின் நேற்றுப் பதவியேற்றார்!

கிளிநொச்சி,டிசெ.16

நேற்று கிளிநொச்சியில் திறக்கப்பட்ட வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உப - குழுவின் தலைமைச் செயலகத்தின், பணிப்பாளராக இரேனியஸ் செல்வின் நேற்றுப் பதவி ஏற்றுக்கொண்டார்.

பணிப்பாளர் பதவிக்கு அவரை விடுதலைப் புலிகள் சிபாரிசு செய்திருந்தனர்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம். பனீலும், அரசுத் தரப்பு பிரதிநிதியாக டி.டி.அமரதுங்கவும் பதவியேற்றனர்.

செயலகத்தின் பணிகள் நேற்றே உத்தியோக பூர்வமாக ஆரம்பமாகின.

தலைமைச் செயலகத்தில் மாநாட்டு மண்டபம், பணிப்பாளர் அறை, உதவிப் பணிப்பாளர்கள் அறைகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி செயலகத்தில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது. (ஐ-3-8)





வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமானப் பணிகள் மற்றும் புனரமைப்பு வேலைகளுக்கான செயற்குழுவின் தலைமைச் செயலகத்தை நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் -

செயலகத்தின் பெயர்ப் பலகையை ஜப்பானியத் தூதர் ஒட்சுகா திரைநீக்கம் செய்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

*(மேலும் படங்கள் 3 ஆம் பக்கத்தில்)*

## புனர்வாழ்வு செயலகத்தை வெஸ்பேர்க் திறந்து வைத்தார்

கிளிநொச்சி,டிசெ.16

வடக்கு - கிழக்கு உடனடி புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உப - குழுவின் செயலகம் நேற்று நண்பகல் 12.20 மணிக்கு கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் செயலகத்தை நாடா வெட்டி, சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

ஜப்பான் தூதர் செய்சூறு ஒட்சுகா பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்தார். அதன் பின்னர் அரசு, விடுதலைப் புலிகள் தரப்பு பிரமுகர்கள் செயலகத்தைப் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில் சமாதான செயலணியின் தலைவர் பேர்னாட் குணதிலக, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த வைபவத்துக்கு முன்பாக முற்பகல் 11.30 மணியளவில் இரு ஹெலிகளில் கிளிநொச்சி விளையாட்டரங்கில் வந்திறங்கிய அரச பிரதிநிதிகள் குழுவை புலிகளின் சமாதானச் செயலகச் செயலர் புலித்தேவன், புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் சுதா ஆகியோர் வரவேற்றனர்.(ஐ-3-8)

## திறப்பு விழாவுக்குத் தயாராகி இருந்த சன சமூக நிலையம் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

வலி.வடக்கு,டிசெ.16

ஏழாலையில் புதிதாக நிறுவப்பட்ட சன சமூக நிலையக் கட்டடம் மீது இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டு வீசித் தாக்கியிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இச்சம்பவம் நடந்திருக்கிறது.

ஏழாலை, வடக்கு கிழக்கு சன சமூக நிலையத்துக்காக புதிதாக நிறுவப்பட்ட கட்டடத்தின் மீதே வெள்ளை வானில் வந்த சிலர் பெற்றோல் குண்டுகளை வீசிச் சேதப்படுத்தியிருக்கின்றனர். அத்துடன் அங்கு தங்கியிருந்த சில இளைஞர்களையும் பொல்லுகள், சைக்கிள் செயின் என்பவற்றால் தாக்கியிருக்கின்றனர்.

இந்தச் சனசமூக நிலையக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று நடைபெறவிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் அங்கு செய்யப்பட்டிருந்தன. இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸாருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## கடற்புலிகளின் திரைப்படம்

வவுனியா,டிசெ.16

கடற்புலிகளின் பத்தாம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு புலிகளின் 'நிதர்சனம்' நிறுவனம் சிறப்பு வெளியீடாக 'கடலோரக் காற்று' என்னும் முழுநீளத் திரைப்படம் ஒன்றை இம்மாத இறுதியில் நவீன தொழில் நுட்பத்துடன் வெளியிடவுள்ளது.

கடற்கரை மக்களுடன் வாழும் கடற்கரும்புலிகளின் வாழ்க்கை முறையினை இத்திரைப்படம் சித்திரித்துள்ளது. இந்தத் திரைப்படத்தில் முதன்முறையாக 'டிஜிட்டல்' தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்துக்கான கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார் ந.கேசவராஜன். இசைப்பிரியன் இசையமைத்துள்ளார். கிருபா ஒளிப்பதிவு செய்துள்ளார். (ஐ-164)

## ஆயுதக் கப்பல் தப்பியது!

கொழும்பு,டிசெ.16

சந்தேகத்துக்கிடமான முறையில் இலங்கைக்கடற்பரப்பினுள் பிரவேசித்த கப்பல் ஒன்றை இந்தியக் கடற்படையினர் வழிமறித்து துரத்தினர் என்றும் -

அக்கப்பல் இந்தோனேசியா பகுதியை நோக்கி தப்பிவிட்டது என்றும-

(14ஆம் பக்கம் பார்க்க)

## முதலில் வெளியேறட்டும்; பின்னர் ஜனநாயக வழிமுறைப்படி தீவகத்தில் ஈ.பி.டி.பி. இயங்கலாம்

### கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வன் உதயனுக்குப் பேட்டி

கிளிநொச்சி,டிசெ.16

ஈ.பி.டி.பி. ஓர் ஆக்கிரமிப்பு படை போன்று ஆயுத வன்முறைப் போக்கில் நெடுந்தீவுக்குள் தரையிறங்கியுள்ளது. அதை மக்கள் ஏற்கவில்லை; எதிர்க்கின்றார்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவிப்பதற்காகத் தொடர் போராட்டங்கள் நடத்தி வருகின்றார்கள்.

எனவே, மக்களின் போராட்டத்துக்கு மதிப்புக் கொடுத்து ஈ.பி.டி.பியினர் முதலில் அங்கிருந்து வெளியேறவேண்டும். அதன்பின்னர் வேண்டுமானால் மக்களுடன்பேசி, தீர்வு கண்டு, அவர்களின் இணக்கத்துடன் ஜனநாயக வழிமுறைகளுக்கு அமைய தீவகத்தில் அவர்கள் செயற்படலாம்.

இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும் பொறுப்போ, பங்களிப்போ புலிகளுடையது அல்ல, அது மக்களுடையதே. மக்களின் விருப்பத்துக்கு அமைவாகவே ஈ.பி.டி.பியினர் செயற்பட முடியும்.

- இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

வடக்கு-கிழக்கு மாகாண உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வு நடவடிக்கைக்கான உபகுழுவின் தலைமைச் செயலகத்தை நேற்று கிளிநொச்சியில் திறந்துவைக்கும் நிகழ்வில் பங்குபற்றிய சமயம் உதயன் செய்தியாளருக்கு அவர் பேட்டியளித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரக்கட்சியில் குரோதமும் விரோதமும் ஆழமாகின்றன

# சமரசப் பேச்சுக்கு அழைக்க அருகதையற்றவர் ஹக்கீம்

## அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்லர் சாதாரண மனிதர் என்கிறார் அதாவுல்லா

கொழும்பு,டிசெம்பர்16

**நிழல் தரும் மரத்தைத் தேர்தல் சின்னமாகக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களிடையே சூடு பறக்கிறது. குரோதமும் விரோதமும் ஆழமாகி வருகின்றன. இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்பவர்கள் ஒன்று சேரும் நிலையில் இல்லை. சமரசம் ஏற்படும் என்றும் கட்சிப் பிளவு நீங்கும் என்றும் கூறுகிறார் ரவூப் ஹக்கீம். ஆனால், எதிரணியை வழி நடத்தும் அதாவுல்லாவோ, சமரசப் பேச்சுக்கு அழைக்க அருகதையற்றவர் ஹக்கீம் என்றார். அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்லர். சாதாரண பேர்வழி என்றும் கூறுகிறார்.**

முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீட உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் 15 பேர் எங்களுடன் இருக்கிறார்கள். நாங்கள்தான் உண்மையான முஸ்லிம் காங்கிரஸ். நாங்கள் நடத்திய அதி உயர்பீடக் கூட்டத்தில தெரிவுசெய்யப்பட்ட சுபைர்தீன்தான கட்சியின் யாப்புப்படி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அல்லர் என்றும் அதாவுல்லா விளக்கம் அளித்தார்.

நேற்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் அமைச்சர் அதாவுல்லாவும் அவரது சகாக்களும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். அப்போதே மேற்கண்டவாறாக எல்லாம் அதாவுல்லா கூறினார்.

நாட்டின் பிரதமர் என்ற வகையில் அரசை ஆதரிக்கும் எங்கள் கட்சியில் சமரசம் ஏற்படவேண்டும் என்பதில் ரணில் விக்கிரமசிங்க காட்டும் ஆர்வத்தை வரவேற்கிறோம். ஆனால், உள்கட்சி விவகாரங்களில் வெளியார் தலையிடுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்றும் அதாவுல்லா சொன்னார்.

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்பதை அப்பீல் நீதிமன்றம் உறுதி செய்துள்ளதே என்று பத்திரிகையாளர்கள் சுட்டிக்காட்டிய போது, நீதிமன்றத் தீர்ப்பு ஊடகங்களில் தவறாக வெளியிடப்பட்டு விட்டது என்றார்.

"ரவூப் ஹக்கீம்தான் முஸ்லிம் காங்கிரஸின் உண்மையான தலைவர் என்று நீதிமன்றத் தீர்ப்பில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

"புதிதாக நாம் தெரிவுசெய்துள்ள தலைவர் சுபைர்தீனின் கடமைகளில, ஹக்கீம் தலையீடு செய்யக்கூடாது; இடையூறு விளைவிக்கக் கூடாது என்று நாம் முதலில் பெற்ற தடை உத்தரவுதான் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நீக்கப்பட்டது. அந்த உத்தரவைத்தான் மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்யும் விதத்தில் தீர்ப்பளித்தது.

"ரவூப் ஹக்கீம் தலைமைப் பதவியிலிருந்து எங்களால் நீக்கப்பட்டதற்கான காரணங்களை நாங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள மனுக்களில் தெரிவித்துள்ளோம்.

"நாம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள மனு அடுத்த வருடம் பெப்ரவரி 7 ஆம் திகதியும், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள மனு ஜனவரி 7 ஆம திகதியும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

"இந்த விசாரணைகளின் பின்னர்தான் எது சரி, எது பிழை என்பது நன்றாகத் தெரியவரும். இப்போது சுபைர்தீன்தான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்" என்றார் அதாவுல்லா.

சட்டத்தரணி அஸ்ரர், மஷர் மௌலானா முதலானோரும் கருத்துத் தெரிவித்தனர்.

ஹிட்லர் மாதிரிச் சர்வாதிகாரியாக நடந்து கொள்கின்றார். குண்டர் பட்டாளம் ஒன்றை வைத்திருக்கிறார். எதிரணியினரைப் பற்றிப் பிரதமருக்கு அண்டல் வைக்கிறார் என்றவாறாக ரவூப் ஹக்கீம்மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ரவூப் ஹக்கீம் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் அரசு சார்பில் கலந்துகொண்டால் பரவாயில்லை. ஆனால், முஸ்லிம் சமூகத்தின் சார்பில் கலந்துகொள்ளக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### வன்னியிலிருந்து கருணா திரும்பினார்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா நேற்று விசேட ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்பு திரும்பினார்.

நேற்றுமுன்தினம் வன்னியில் நடைபெற்ற உப குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட கேணல் கருணா, ஓமந்தையில் இருந்து காலை 9 மணியளவில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் பயணஞ்செய்தார். பளுகாமம், கண்டுமணி மகா வித்தியாலய மைதானத்தை வந்தடைந்த இவரை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஸ் உட்பட முக்கிய தளபதிகள் வரவேற்றனர்.

## வன்னியில் மு.கா. சார்பாக ரிசாத் பதியுதீன், ரபீக்

கிளிநொச்சியில் நடைபெறும் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு உப குழுவின் கூட்டத்தில் அரசுத்தரப்பில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்பதிகாரியுமான ரிசாத் பதியுதீன் மற்றும் ஏ.ரபீக் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இது குறித்து ரிசாத் பதியுதீன் எம்.பி.தகவல் தருகையில், வெளிநாட்டு நிதி உதவியைப் பயன்படுத்தி எவ்வாறு வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பு செய்வது என்பது பற்றியும். (ஐ)

## தீர்வுக்கு இந்திய உதவியை நிச்சயம் பெற்றுக்கொள்வோம்!

### அமைச்சர் மாரப்பன கூறுகிறார்

சென்னை,டிசெ.16

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் உதவி தேவை. அந்த உதவியை நிச்சயம் பெறுவோம் என இலங்கை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இந்தியாவில் கூறியிருக்கிறார்.

அயல் நாடான இலங்கையில் இது போன்ற அமைதியின்மை நிலவுவது இந்தியாவிற்கும் ஒரு தொல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சுகளின் சில அம்சங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா எதிர்ப்பு தெரிவித்து வருவது குறித்து செய்தியாளர்கள் அவரிடம் வினவியபோது, இலங்கையைப் பொறுத்தவரை நாடாளுமன்றம்தான் மிக உயர்ந்த அதிகாரம் படைத்தது என்றும் நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவுக்குதான் பெரும்பான்மைப் பலம் இருக்கிறது என்றும் அமைச்சர் மாரப்பன பதிலளித்தார். (ஐ)

## மக்கள் சுயகௌரவத்துடன் வாழ புனர்வாழ்வு செயலகம் அடித்தளமிடும்

### தூதர் ஜோன் வெஸ்பேர்க் நம்பிக்கை

கிளிநொச்சி,டிசெ.16

வடக்கு - கிழக்கில் கடந்த 20 வருடகாலமாக இன்னல்களை அனுபவித்துவந்த மக்களின் மறுவாழ்



வுக்கான கட்டமைப்புக்களை உப குழு செயலகம் மேற்கொள்ளும். இந்தச் செயலகம் முன்னெடுக்கவுள்ள பணிகள்மூலம் தமிழ் மக்கள் சுயகௌரவத்துடன் வாழும் நிலைமை உருவாகும் என நம்புகின்றேன்.

- இப்படிக் கூறினார் நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க்.

கிளிநொச்சியில் வடக்கு - கிழக்கு அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான செயற்குழுவின் செயலகத்தைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையில அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் தொடர்ந்த யுத்தம் காரணமாக சீரழிந்து போயுள்ள மக்களின் வாழ்க்கையை சீராக்குவது தொடர்பாக தாய்லாந்துப் பேச்சுக்களின்போது விரிவாக ஆராயப்பட்டு, அதன்பயனாக உருவாக்கப்பட்டது தான் இந்தச் செயலகம். இன்று இந்தச் செயலகம் திறக்கப்படுவது இந்தப் பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

மக்களின் மறுவாழ்வுக்கான கட்டமைப்பை இந்தச் செயலகம் முதலில் வடிவமைக்கும். அதன் பின்னர் வெளிநாடுகளின் உதவியுடன் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

மக்களின் தேவைகளை மாவட்ட மட்டத்தில் இனங்கண்டு அடிமட்டத்தில் இருந்து அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இடம் பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களில் குடும்பமாக குழந்தை குட்டிகளு ன் - சுயகௌரவத்துடன் - வாழ இந்தச் செயலகம் பணிபுரியும்.

வடக்கு - கிழக்கு மக்கள் போன்று ஏனைய பிரதேச மக்களும் சுயகௌரவத்துடன் தமது குடும்பங்களுடன் வாழக்கூடிய நிலையை தற்போதைய முயற்சிகள் ஏற்படுத்தும் என நம்புகின்றோம். இந்த சமாதானப் பாதையில் இணைந்துள்ள சகலரும் மனப்பூர்வமாக தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் - என்றார் வெஸ்பேர்க். (ஐ-3-8)

### ஈழத்தமிழர்களுக்காக

## தீக்குளித்த திருச்சி இளைஞரின் 7 ஆவது ஆண்டு நினைவுதினம்

திருச்சி,டிசெ.16

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தீக்குளித்து உயிர்துறந்த தமிழக இளைஞரான அப்துல் ரவூப்பின் ஏழாவது நினைவுநாள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

திருச்சியைச் சேர்ந்த இவர் 1996 ஆம் ஆண்டு அவருக்கு 24 வயதாக இருந்தபொழுது இத் தியாகச் செயலைப் புரிந்திருந்தார்.

1996 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா படையினர் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமித்தபொழுது - பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலகட்டத்தில் - இச்சம்பவம் இடம் பெற்றது.

இவர் தனது இறுதி மடலில் 'ஆயிரமாயிரம் அப்துல் ரவூப்கள் எழுவார்கள்' என்று தெரிவித்திருந்தார். (ஐ-9)

### பிரதமரின் செயலாளரைச் சந்திப்பது குறித்து

## பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் அரச அதிபரோடு இன்று மீண்டும் பேசுவர்

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக பிரதமரின் செயலாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கென பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் இன்று யாழ்.அரச அதிபருடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி யாழ் அரச அதிபருக்கும் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளரையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதாக அரச அதிபர் உறுதி அளித்திருந்தார். எனினும், இதுவரை அது குறித்து எந்தவிதமான அறிவித்தலையும் எமக்கு அவர் தரவில்லை. இதனாலேயே, அரச அதிபரை மீண்டும் சந்திக்கின்றோம் என்று பாதுகாவலர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கூட்டம் நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் சங்கத் தலைவர் ப.செல்வராசா தலைமையில் நடைபெற்றது என்றும் -

இந்தக் கூட்டத்தின் இறுதியிலேயே சங்கத் தலைவர் தலைமையிலான ஐவர் கொண்ட குழு ஒன்று இன்று அரச அதிபரைச் சந்திப்பது என முடிவு செய்யப்பட்டது என்றும் - அவர் மேலும தெரிவித்தார். (எ-5)

### வி.பி.கின்ன கிரிக்கெட் போட்டி

## நேற்றைய ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா வெற்றி

சிட்னி,டிசெ.16

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் மூன்று நாடுகள் பங்குபற்றும் வி.பி. கிண்ண முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் நேற்று நடந்த இரண்டாவது ஆட்டத்திலும் ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்து அணியை 89 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸதிரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 318 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியின் சார்பில் அடம் கில்கிறிஸ்ட் 104 பந்து வீச்சுக்களைச சந்தித்து 124 ஓட்டங்களையும் றிக்கி பொன்டிங் 123 பந்து வீச்சுகளில் 119 ஓட்டங்களையும் ஷேன்வோர்ன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 229 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் நிக்நைற், கிறேக் வைற், இன் பல்கி வெல் ஆகியோர் முறையே 70, 57 மற்றும் 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆஸ்திரேலியப் பந்துவீச்சில் பிரட் டிலீ,ஷேன் வோர்ன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும், க்கிளஷ்பீ, வற்சன் மற்றும் லெஹ்மன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

39 ஓவர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரரால் அடிக்கப்பட்ட பந்தை தடுத்து 'ரன் அவுட்' செய்ய எத்தனிக்கையில் ஷேன்வார்னின் தோள் பகுதி நிலத்துடன் மோதுண்டது. இதில் காயமடைந்த அவர் களத்திலிருந்து வெளியேறினார்.

இதேவேளை -

அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் ஷேன் வோர்ன் கலந்து கொள்வது சந்தேகம் என்று ஏ.பி. செய்தி ஒன்று தெரிவித்தது.



தோள் மூட்டில் பலமான அடிபட்ட நிலையில் ஷேன் வோர்ன்


நேற்றைய ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக அடம் கில்கிறிஸ்ட் தெரிவு செய்யப்பட்டார்.

இத் தொடரில் மூன்றாவது ஆட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிரிஸ்பேர்னில் நடைபெறவுள்ளது. இதில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதுகின்றன. (ஒ-5)





நேற்று ஹெலிகளில் வந்து கிளிநொச்சியில் இறங்கிய முக்கிய பிரமுகர்கள்



அரசுத் தரப்புத் தலைவர் பேர்னாட் குணதிலகவை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வரவேற்றபோது...



ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகாவை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வரவேற்றபோது...

**படங்கள் : தேவராஜன்**



நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்குடன் அளவளாவும் தமிழ்ச்செல்வன்.

மாமர நிழலிலே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது...



# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

வான்கோழி (Turkey) சேவல், பேடு என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.118, பலாலிவீதி, திருநெல்வேலி. (11817)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி கணேஸ்வரத்தில் காய்க்கும் தென்னைகள் பலவற்றுடனும் கிணற்றுடனும் வீடு கட்டக்கூடிய மேட்டு/தோட்டக்காணி 7 பரப்புஉண்டு. தொடர்பு: அ.இலக்ஸ்மன், அருளகம், அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி வடக்கு. (11786)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன் ஒழுங்கையில் 31/4 ப்ரப்புக் காணி, வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சிவராஜா, சுழாவடி தபால் கந்தோருக்கு அருகில், 04ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (11208)

## காணவில்லை

மாவெள்ளைநிறம், பட்டிபார்த்த கொம்புடைய பால்மாடு 05.12.2002 வியாழக்கிழமை முதல் காணாமற் போய்விட்டது. தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: தர்மலிங்கம் சுசிலாதேவி, 34, காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி, கச்சேரியடி. (11795)

## தேவை

இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. கூடுதல் விலை தரப்படும். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (முடமாவடிச் சந்திக்கும் பூங்கனிச் சோலைக்கும் இடையில்). (11707)

## ஆங்கில வகுப்புகள்

O/Lஇற்குத் தோற்றிய மாணவர்களுக்கும் A/L மாணவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் ஆரம்பம். 16-12-2002 அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: க.நாகேந்திரம், 82/24(பழையது34/4), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (11709)

## வகுப்புகள்

O/L 2003 மாணவர்களுக்கான மாலை வகுப்புகள். தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், சமூகக்கல்வி சிறுதொகை மாணவர்கள், தனித்தனி கவனம். விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (11789)

## தவறிவிட்டது

383/261, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைச் சேர்ந்த க.கோபாலகிருஷ்ணனின் கைப்பை, தேசிய அடையாள அட்டை (இல.731464138V), விசேட அடையாள அட்டை (இல.0902016307), விற்பனைச் சிட்டைகள், காசோலை, பணம் என்பவற்றுடன் 30-11-2002 அன்று மின்சார நிலைய வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல. 2223276 (11688)

செல்வி யாழினி சிதம்பரநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.848022543V), கோப்பாய்க்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காமாட்சி அம்பாள் கோயிலடி, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.(11819)


# இழப்புகளுக்கு என்றோ ஒருநாள் தகுந்த இழப்பீடு கிடைத்தே தீரும்!

## மாவை சேனாதிராஜா எம்.பி. உறுதி



கொழும்புத்துறை,டிசெ.16

'ஈழத்தமிழர்களின் இழப்புகளுக்கு என்றோ ஒருநாள் தகுந்த இழப்பீடு கிடைத்தே தீரும்.'

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

பாஷையூர், அரியாலை பகுதி மக்களின் குறைகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாவை சேனாதிராஜா எம்.பி. நேரில் சென்று கேட்டறிந்தார். அவருடன் கூட்டமைப்பு பிரமுகர் எவ்.எக்ஸ்.செல்வநாயகமும் உடன் சென்றிருந்தார்.

அப்போது மக்கள் மத்தியில் பேசும்போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

'தமிழ் மக்களின் வாழ்விடங்களின் அழிவு, சேதங்கள் என்பன குறிப்பிட்ட ஓர் இடத்தில் மட்டும் ஏற்பட்டவையல்ல. தமிழீழத்தின் 30 வீதமான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன; சிதைவடைந்துள்ளன. சில பிரதேசங்களில் 3 வருடங்களும் மேலும் சில பிரதேசங்களில் 7 வருடங்களும் எஞ்சியவை 15வருடங்களாக மக்கள் செல்ல முடியாதுள்ளன. இப்பிரச்சினை இன்று ஒஸ்லோவரை சென்றுள்ளது. எனவே என்றோ ஒருநாள் இவ்விழப்புகளுக்கெல்லாம் உரிய இழப்பீடு கிடைத்தே தீரும்.

எமது பிரதேசங்களின் புனரமைப்பு கட்டுமானப் பணிகளை முதன்மைப்படுத்தியே பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

உலகநாடுகளின் உதவிகளைக் கொண்டு புனரமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பாரிய பணியை எமது ஒதுக்கீட்டுநிதியில் இருந்து மேற்கொள்வது என்பது இயலாத காரியம். அவசியமான தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கு எமது நிதியைப் பயன்படுத்துவோம்.

யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திலும் அடுத்து நாம் விடுதலைப் புலிகள் உயர் பீடத்தை சந்திக்கும்போதும் மேற்படி சேதங்கள், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறவுள்ளேன் என்றார்.

முன்னதாகப் பாஷையூர் மீனவர்கள் தொழிலுக்குச் சென்றுவர படையினர் அமைத்திருக்கும் மிக ஒடுங்கிய பாதை வழியே செல்கையில் மீனவர்கள் அனுபவிக்கும் சிர மங்களையும் நேர விரயங்களையும் மாவை சேனாதிராஜா எம்.பி நேரில் அவதானித்தார்.

பாஷையூர் குளத்தில் இருந்து கடலுக்குச் செல்லும் வெள்ள வாய்க்கால் கடந்த பல வருடங்களாக துப்புரவு செய்யப்படாமல் குப்பைகள் நிறைந்து காணப்படுவதை நேரில் நாடாளுமன்ற உறுப்பினர் அவதானித்தார்.

தொற்றுநோய்களுக்கு வழிவகுக்கும் இவ்விடயம் உடனடியாக சீர் செய்யப்படவேண்டும். ஆகவே நேரடியாக மாநகர முதல்வருடன் தொடர்புகொண்டு சுத்தம் செய்ய ஒழுங்கு செய்வதாக அவர் தெரிவித்தார்.

பாஷையூர் காட்டுவளவுப் பகுதியில் முன்னர் அமைக்கப்பட்டு தற்போது தரைமட்டமாகியுள்ள வீடமைப்புத் திட்ட வீடுகளை மீளமைத்துத்தர வீடமைப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

அரியாலை சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, சிறுவர் பூங்கா, கலை அரங்கம் ஆகியவற்றின் புனரமைப்புக்கு கட்டம் கட்டமாக நிதியுதவி வழங்க விரைவில் தான் ஏற்பாடு செய்து தருவதாக அவர் உறுதியளித்தார். (ஓ-30)

## வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

குடாநாட்டில் பரவலாக வைரஸ் காய்ச்சல் பரவிவருவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.ஆஸ்பத்திரியில் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ்.ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் தினசரி நூற்றுக்கும் மேற்பட்டோர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. (ஓ-139)

## காக்கைதீவில் கழிவுப் பொருள்களால் துர்நாற்றம்

அராலி,டிசெ.16

யாழ்.காக்கைதீவுப் பகுதியில் கொட்டப்படும் கழிவுப்பொருள்களால் அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் காக்கைதீவு வீதியூடாகச் செல்லும் பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-ரி)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

தீவுப்பகுதி தெற்கு வேலணைப் பிரதேச செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் என்பன தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என பிரதேச செயலர் செ.இரத்தினம் அறிவித்துள்ளார். (எ)


## கண்ணீர் அஞ்சலி

# ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 25 - 09 - 1980



தமிழீழ மண்ணில் 16 - 12 - 2000

**கப்டன் தீவகன்**

**சோமசுந்தரம் தினவண்ணன்**

*மண்டைதீவு*

கண்கள் கலங்குதடா! நெஞ்சு துடிக்குதடா!
நீயில்லையெனும்போது இதயம் வெடிக்குதடா !
தலைத்தீவின் தவப்புதல்வா! தமிழீழப் பற்றாளா!
திருமகனே தவிக்கின்றோம் உன்நினைவால் நாம்என்றும்.

*கொக்குவில்* (11820) பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24 - 03 - 1944



விண்ணில் 21 - 12 - 1996

**அமரர் முத்துச்சாமி மகாலிங்கம்**

*(வின்சிலோ கராஜ் உரிமையாளர்)*

திதி: 16.12.2002 ஏகாதசி

அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
அவனியிலே வாழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
ஆறாது எங்கள் துயர்!

*53, பெரியதம்பிரான் வீதி,*
*வண்ணார்பண்ணை.*
- குடும்பத்தினர். (11822)



# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தம்பையா

(எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பையா நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், தங்கமுத்து சுப்பிரமணியம் (அம்பாள் களஞ்சியம் (இத்தாவில்), மகேஸ்வரி, வேலாயுதம (சட்டத்தரணி), கனகமணி சண்முகசுந்தரமூர்த்தி (அதிபர், சுதுமலை வடக்கு த.க.பாடசாலை), கோவிந்ததாஸ் (சிரேஷ்ட முகாமையாளர், ஹற்றன நஷனல் வங்கி, கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய தபாலகர், பளை), கனகமணி, காலஞ்சென்ற சின்னத்தம்பி, சரஸ்வதி, செல்லையா, வசந்தி (ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி), கேதாரகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் இறுக்கிரியைகள் அவரது தற்காலிக இல்லத்தில் நாளை 17.12.2002 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தற்காலிக முகவரி: | தகவல்: |
| இ.போ.ச.டிப்போ முன்பாக, | சுப்பிரமணியம் (மகன்) |
| *கோகுல வீதி,* | வேலாயுதம் (மகன் - சட்டத்தரணி) |
| *கோண்டாவில் வடக்கு,* | சண்முகசுந்தரமூர்த்தி (மகன்) |
| *கோண்டாவில்.* | கோவிந்ததாஸ் (மகன்) (11821) |

## திருமதி வடிவேலு பார்வதி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.காரைநகர் வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு பார்வதி அவர்கள் 11.12.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஐயம்பிள்ளை வடிவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் கதிராசியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - வள்ளியம்மை அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிறிமோகன் மற்றும் சிறிமுருகன் (சுவிஸ்), ஜெகநாதன் (ஹொலண்ட்), ரகுநாதன் (சுவிஸ்), ராஜலட்சுமி (ஜேர்மனி) காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சத்தியபாமினி (ஹொலண்ட்), சசிகரன் (லண்டன்) கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயமனோகரன், நளாயினி, சிவரஞ்சினி, சுகன்யா ஆகியோரின் மாமியாரும் சந்தோஷ், நிரோஜன், மாலதி, நிதர்சன், பிரவீண், றபீசன், சாருஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வள்ளியம்மை தர்மலிங்கம், தில்லையம்பலம் பாக்கியம், பழனி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-12-2002) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| | தகவல்: |
| *210, காரைநகர் வீதி,* | ஐயம்பிள்ளை வடிவேலு (கணவர்) |
| *(வில்லூன்றிப்* | (யாழ்.பாய்க்கடை உரிமையாளர்). |
| *பிள்ளையார் கோயில் அருகில்)* | (11824) |
| *கொட்டடி, யாழ்ப்பாணம்.* | |

## சின்னத்தம்பி கதிரவேலு சுப்பிரமணியம்

(ஜே.பி.)

*(இளைப்பாறிய தலைமை ஆசிரியர், அரியாலை)*

அரியாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி கதிரவேலு சுப்பிரமணியம் அவர்கள் 14.12.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளை (நமசிவாயத்தின் மகள்) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி ரஜினி (எழில்), பத்மமோகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சின்னத்துரை பத்மமோகன் (லண்டன்), அவர்களின் அருமை மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், பாக்கியம், செல்லம்மா ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் செல்வரட்ணம், மாணிக்கவாசகர், பாலசுந்தரம் ஆகியோரின் மாமனாரும் சின்னத்துரை - நவமணி தம்பதிகளின் சம்பந்தியும் முகிலன், கவிதன், செந்தூரன், மயூரன், ஐங்கரன் ஆகியோரின் அருமைப் பேரனாரும் குகதாசன் (இ.மி.ச.) அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.12.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு 350, கண்டி வீதியிலுள்ள தற்காலிக இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக அரியாலை சிந்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| | தகவல்: |
| *350, கண்டி வீதி,* | ந.குகதாசன் (இ.மி.சபை) |
| *அரியாலை, யாழ்ப்பாணம்.* (C/254.18) | |

## உதயன்

# யுத்தமா, அபிவிருத்தியா? தீர்மானிக்கும் காலம் இது!

"அர்த்தமற்ற யுத்தமா, அல்லது நாட்டின் அபிவிருத்தியா? - இதைத் தீர்மானிக்கும் இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இந்தத் தடவை சந்தர்ப்பத்தைக் கோட்டைவிட்டால் நாட்டில் ஏற்படும் பேரழிவை யாராலும் தடுக்கமுடியாமல் போகும்."

- இப்படி எச்சரித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஐக்கிய தேசியக் கட்சியின் 48 ஆவது வருடாந்த மாநாட்டிலேயே நாட்டின் தற்போதைய யதார்த்த நிலையை தெட்டத் தெளிவாக இப்படி அம்பலப்படுத்தியிருக்கின்றார் பிரதமர்.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஆண்டு இறுதியில் நாட்டைப் பொறுப்பேற்றபோது நாடு இரண்டுபட்டிருந்தது. பொருளாதாரச் சிக்கலில் மாட்டி, வங்குரோத்து நிலையில், இன்றோ, நாளையோ செத்து மடியும் நோயாளியைப் போல 'சேடம்' இழுத்துக்கொண்டிருந்த கட்டத்தில்தான் ஆட்சியைப் பொறுப்பேற்றோம் - என்றும் விவரித்திருக்கின்றார் அவர்.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் நாட்டின் முழுவளத்தையுமே யுத்தத்தில் கரியாக்கி, தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை ஆயுத முனையில் அடக்கி, ஒரு சர்வாதிகாரத் திசையில் நகர்ந்துகொண்டிருந்த ஆட்சி அதிகாரத்தை, அந்தத் திருப்பத்தில் வைத்து பிரதமர் ரணில் பொறுப்பேற்றார் என்பது முழு உண்மையே.

"19 வருட யுத்தத்தினால் அதல பாதாளத்துக்குள் சென்றுவிட்ட நாட்டில் யுத்தமின்றி, கத்தியின்றி, இரத்தமின்றி சமாதானத்தை ஏற்படுத்துங்கள் என்று மக்கள் ஆணை தந்தார்கள். மக்களின் ஆணையின் பேரிலேயே நான் புலிகளுடன் யுத்த நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தேன். அதனைப் பலரும் எதிர்த்தனர்; என்மீது குற்றஞ்சுமத்தினர். ஆனால், இன்று அதன் பலனைக் கண்டு வியக்கின்றனர். தமிழ், சிங்கள மக்கள் அமைதியாக வாழ்கின்றனர்; குண்டு வெடிப்புகள் ஓய்ந்துவிட்டன; குரோதங்கள் நீங்கிவிட்டன" - என்று பெருமிதத்தோடு கூறுகின்றார் பிரதமர்.

அவர் கூறுவதுபோன்று, அர்த்தமற்ற யுத்தமா, அல்லது அனைவருக்குமான அபிவிருத்தியா என்பதை நாம் அனைவரும் சேர்ந்து தீர்மானிக்கும் காலகட்டத்தில் நிற்கின்றோம்.

யுத்தத்தை நிறுத்தி, ஐக்கியத்துக்கும், அபிவிருத்திக்கும் கிடைத்துள்ள வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதில் - சமாதான வாஞ்சையில் - நாம் தீரா விருப்புடையவர்களாக இருக்கலாம். அந்த விருப்பை வெறுமனே ஆதரவாக வெளிப்படுத்தினால் மட்டும் நாம் சமாதானத்தை அடைந்துவிட முடியாது.

இந்தச் சமாதான சூழ்நிலை ஏற்படுவதை விரும்பாத பல தீவிரவாத மற்றும் ஜனநாயக சக்திகள் தென்னிலங்கையில் உள்ளன. அதே போன்று தெற்கில், தென்னிலங்கைப் பாதுகாப்பில் இருந்துகொண்டு வடக்கில் தமது வாலாட்டங்களை மேற்கொள்ளும் சக்திகளும் உள்ளன. இவை இரண்டும் எப்போது யுத்தம் வெடிக்கும்; நமது கைவரிசையை மீண்டும் காட்டலாம் என்ற நப்பாசையில் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு காத்திருக்கின்றன.

மீண்டும் யுத்தத்தைத் தோற்றுவிக்கும் தீய செயலுக்காகக் கூட்டமைத்துச் செயற்படவும் அவை பின்னிற்கப்போவதில்லை.

சமாதானத்துக்கு எதிரான இத்தகைய தீய சக்திகளின் இச்செயற்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறிந்து அடக்காவிட்டால், இவ்வளவு காலமும் இவ்வளவு கஷ்டத்துடன் - சகிப்புத் தன்மையுடன் - கட்டிவளர்த்த சமாதான சூழ்நிலை தானாகவே குழம்பிப்போய்விடும்.

ஆகவே, இத்தகைய சக்திகளை இனங்கண்டு, அவற்றுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, அவற்றின் சமாதான விரோத நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளியெறிய அனைவரும் முன்வர வேண்டும்.

பிரதமர் முதல் சமாதானம் விரும்பும் ஒவ்வொரு பிரஜையும் ஆழமான மனதுடன் அணுகி ஆற்ற வேண்டிய பணி இது.

### நோர்வேயில் இருந்து புலிகள் வாங்கிய

# கருவிகள் உரிய அனுமதி பெற்றே வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டன!

## எவரும் கவலைப்படத் தேவையில்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு,டிசெ.16

விடுதலைப் புலிகள் நோர்வேயில் இருந்து கொள்வனவு செய்த வானொலி ஒலிபரப்புக் கருவிகள் முறைப்படி - அனுமதி பெற்ற பின்னரே கொழும்பு ஊடாக வன்னிக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளன. எனவே இதுகுறித்து எவரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்துள்ளார் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலிபரப்புக் கருவிகள் வழங்கப்பட்டமை மகிழ்ச்சிதரும் விடயம். ஏனெனில் இலங்கையில் வாழும் மூவினங்களும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு வழி சமைக்கப்பட்டுள்ளது.

இன்று உருவாகிவரும் சமாதான சூழ்நிலையில் அனைத்துத் தரப்பினர் இடையேயும் சிறந்த ஊடகத் தொடர்பு அவசியம். எனவே, இதற்கு விடுதலைப் புலிகளின் வானொலித் தொடர்பு வளர்ச்சியடைவது மிகவும் முக்கியமானதாகும்.

இதுகுறித்து தவறான கருத்துக்கள் பல எழுப்பப்பட்டபோதிலும் அது குறித்து நாம் அலட்டிக்கொள்ளப்போவதில்லை. இன்று உருவாகியுள்ள சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கம் கொண்டவர்களே இத்தகைய கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றியே சம்பந்தப்பட்ட கருவிகளை வன்னிக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகள் உயர்தொழில்நுட்ப வலுக்கொண்ட வானொலி ஒலிபரப்புச் சேவையை நடத்துவதை இந்தியா எதிர்ப்பதாக வெளியிடப்படும் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது.

வானொலிக் கருவிகளை புலிகள் வன்னிக்கு எடுத்துச்சென்றமை குறித்து எவரேனும் விளக்கம் பெற விரும்பினால் அவர்களுக்கு உரிய முறையில் விளக்கம் அளிக்க நான் தயாராகவிருக்கிறேன் - என்றார் அமைச்சர். (எ-12)

# கொழும்பு மருத்துவர் அசிரத்தை; ஒவ்வாமையால் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.16

கொழும்பு மருத்துவர் கொடுத்த மருந்தால் ஒவ்வாமை ஏற்பட்டு பெண் ஒருவர் உயிரிழந்தார். ஒவ்வாமை குறித்து அந்த மருத்துவரிடம் தெரிவித்தபோதும் அவர் சரியாகக் கவனம் செலுத்தவில்லை எனக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்மணியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஒருவார காலத்துக்கு முன்னர் இப்பெண்மணி கொழும்பு சென்றிருந்தார். தனக்கிருந்த 'குடற்புண்' நோய்க்காக கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அவர் சிகிச்சை பெற்றார். அங்கு மருத்துவரால் வழங்கப்பட்ட மாத்திரையை உட்கொண்டதைத் தொடர்ந்து இப்பெண்மணிக்கு உடலெங்கும் கொப்புளங்கள் ஏற்பட்டன. இதற்கு மாத்திரையினால் ஏற்பட்ட ஒவ்வாமை என்று அவர் புரிந்துகொண்டார். மறுநாள் அதே மருத்துவரிடம் சென்று இது தொடர்பாக அவர் முறையிட்டார்.

ஆனால், தான் கொடுத்த மருந்து ஒவ்வாமையை ஏற்படுத்தவில்லை என்று அந்த டாக்டர் தெரிவித்தார். இதற்குக் காரணம் வேறு என்று கூறிய அந்த டாக்டர் பெண்மணியை திருப்பி அனுப்பிவிட்டார்.

கொழும்பு மருத்துவரின் சொல்லை நம்பி தொடர்ந்து மாத்திரையை உட்கொண்ட பெண்மணி யாழ்ப்பாணம் திரும்பினார்.

அங்கு ஒவ்வாமை வலுவடையவே கடந்த 7ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் இப்பெண்மணி அனுமதிக்கப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் 6நாள்களின் பின்னர் காலமானார்.

இது தொடர்பாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

அனைத்து மருந்துகளுமே இலட்சத்தில் ஒருவருக்கு ஒவ்வாமை ஏற்படுத்துவனவே ஆகவே நோயாளர்தான் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். மருந்துகளை உட்கொள்ளும் போது உடலில் பாதிப்புக்கள் தென்பட்டால் மருந்து உட்கொள்வதை நிறுத்திவிடவேண்டும். அத்துடன் உடனடியாகத் தகுதியான மருத்துவரை அணுகி அவரது ஆலோசனையைப் பெற வேண்டும் - என்று கூறப்பட்டது. (ஒ-15)

## வலி.வடக்கு அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

வலி.வடக்கு பிரதேசசபையினால் வலி.வடக்கின் அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களை தயார்செய்வதற்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் அளவெட்டி பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரியும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மற்றும் முன்பள்ளிகளின் பொறுப்பாளர்கள், ஆசிரியர்களைக் கலந்துகொள்ளும்படி பிரதேச சபையினர் வேண்டியுள்ளனர். (ஓ-86)

## அந்திரான் வாய்க்காலை புனரமைக்குமாறு கோரிக்கை

வலி.மேற்கு,டிசெ.16

சங்கானை அந்திரான் வாய்க்காலைப் புனரமைப்பதுடன் அங்கு மதகு ஒன்றையும் அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அந்திரான் வாய்க்கால் புனரமைக்கப்படாததாலும் மதகு அமைக்கப்படாததாலும் மழைகாலங்களில் சங்கானை - அந்திரான் வீதியில் பொதுமக்கள் பயணம் செய்யமுடியாதநிலை கடந்த பல வருடங்களாக இருந்துவருகின்றது என்றும் - கூறப்பட்டது.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப் பகுதி மக்கள் சங்கானைக்குச் செல்வதற்கு மேற்படி வீதியைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட வாய்க்கால் புனரமைப்பு மற்றும் மதகு அமைத்தல் தொடர்பாகத் தாம் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்ததாகவும் -

எனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் -

அந்திரான் பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-175)

### நாளை

மார்கழி 02
செவ்வாய்க்கிழமை
(17.12.2002)
திதி : திரயோதசி
முன்னிரவு 10.55 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பின்னிரவு 3.44 வரை.
பிரதோஷ விரதம்
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 12.22 - 1.52
ராகுகாலம் : 7.52 - 9.22
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பெருந்தன்மையோடு பழகி அறியாதவன் பேனாவோடு பழகத்தகாதவன்.

# மாறுபட்ட நடைமுறைகளில் சந்தைகளில் வரி அறவீடு

## விவசாயிகள், வியாபாரிகள் கவலை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தைகளில் மாறுபட்ட நடைமுறைகளில் வரி அறவீடு செய்வதாக விவசாயிகளும் வியாபாரிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொதுச்சந்தைகள் உள்ளூராட்சிச் சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்றன. சந்தைகள் குத்தகை அடிப்படையில் வருடாந்தம் தனிப்பட்ட நபர்களுக்கு கேள்விப்பத்திரம்மூலம் வழங்கப்பட்டுவருகின்றன.

பொதுசந்தைகளில் பொருள்களைக் கொண்டுசென்று மொத்தமாக விற்பனை செய்யும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் விற்பனை செய்த பெறுமதியின் சதவீத அடிப்படையில் குத்தகைக்கு எடுத்தவர்கள் வரி அறவீடு செய்கின்றனர்.

வரி அறவீடு தொடர்பாக உள்ளூராட்சிச் சபைகள் விதித்துள்ள தொகையிலும் அதிகரித்த வீதத்தில் குத்தகைக்காரர் கேள்வி அறவீடு செய்வதாகக் கூறப்படுகின்றது.

பொருள்களை நிறுப்பதற்கு (தராசு) உரிய கட்டணத்தையும் சேர்த்து நூற்றுவீதத்தில் வரி அறவீடு செய்வதும்; கொண்டு சென்று விற்பனை செய்யும் மரக்கறிவகையில் நிறுப்பதற்கு முன்னர் தரகுக்கூலி என்ற வகையில் குறிப்பிட்ட அளவு பொருள்களை அள்ளி எடுப்பதும் சாதாரண நடைமுறையாகப் பல சந்தைகளில் பின்பற்றப்படுகின்றன.

வரி அறவீடு செய்யும் நடைமுறைகள் சந்தைக்குச் சந்தை மாறுபட்ட வீதத்தில் பின்பற்றப்படுவதும் குத்தகைக்காரர்களின் வல்லமைக்கு ஏற்றவீதத்தில் வரி அறவீடு செய்யப்படுவதும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளைக் கவலைகொள்ளச்செய்துள்ளது.

சந்தைகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான உள்ளூராட்சி அமைப்புகளின் நிர்வாகிகளுக்கு இதுபற்றி முறைப்பாடு செய்தும் அவர்கள் வரி அறவிடும் நடைமுறைகளில் தலையிடாமல் இருந்துவருவதாகவும் கூறப்படுகின்றது. (ஓ-11)

# ஜனவரிமுதல் ம.எண்ணெய், டீசல் 'பவுஸர்'களில் குடாநாட்டுக்கு!

## எடுத்துவர ஏற்பாடு நடக்கிறது

அரியாலை,டிசெ.16

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஏ - 9 பாதையூடாக 'பவுஸர்' வாகனங்கள் மூலம் மண்எண்ணெய், டீசல் போன்ற எரிபொருள்களை குடாநாட்டிற்கு எடுத்துவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

33 ஆயிரம் லீற்றர்கள் எரிபொருள் எடுத்துச்செல்லக்கூடிய இரண்டு பவுஸர்களில் தற்போது பெற்றோல் எடுத்துவரப்படுகின்றது.

அத்துடன் சிறிய பவுஸர்கள் மூலம் டீசலும் எடுத்துவரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனவரி மாதம் தொடக்கம் இப்பணி விஸ்தரிக்கப்பட்டு தரைப்பாதையூடாக பவுஸர்கள் மூலம் டீசல், மண்எண்ணெய் போன்றவற்றை எடுத்துவருவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரைப்பாதையூடாக டீசல், மண்எண்ணெய் என்பன எடுத்துவரும் சந்தர்ப்பத்திலும் அவற்றின் விலைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என்று கூறப்படுகிறது. (ஒ-17)

## கலண்டர், டயறி விற்பனைக்கு

2003ஆம் ஆண்டிற்கான அழகிய வர்ணப்படக் கலண்டர்கள் (03அளவுகளில்) மனேச்மென்ற், டெஸ்க் டயறிகள் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு தொகைக்கு ஏற்ப விசேட கழிவுகள் வழங்கப்படும். எமது காட்சியறைக்கு விஜயம் செய்து உங்களுக்குத் தேவையான வடிவங்களில் கலண்டர், டயறிகளைக் கொள்வனவு செய்து கொள்ளுங்கள்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)
தொ.பே.இல. 222 2567
(11752)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 05 - 1933



மறைவு 27 - 12 - 2001

கொய்யாத்தோட்ட விநாயகர் ஆலயத்தில் சிவபதமடைந்த

**அமரர் தம்பிப்பிள்ளை முருகேசபிள்ளை**

திதி: 16.12.2002 ஏகாதசி

அன்போடு பேசி பண்போடு வாழ்ந்த உங்களது
பாசமுகம் எப்போதும் எம் கண்முன்னே தெரிகிறது!
ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் என்றும் நிலைத்தே இருக்கும்!

*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*
(11782)
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 04 - 1926



மறைவு 16 - 12 - 1999

**திருமதி சிவசுந்தரம் வனசாட்சி**

திதி: வளர்பிறை நவமி(மார்கழி) 11.01.2003

எங்கள் அன்பின் குலவிளக்காய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
எங்களை வழிநடத்திய பாசமிகு தாயே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வீ.எம்.றோட்,*
*பருத்தித்துறை.*
(C/25401)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 04 - 1940



மறைவு 16 - 11 - 2002

**திருமதி பொன்னுச்சாமி சிவபாக்கியம்**

*(உரிமையாளர், V.S.P. பரிமளா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)*

16.11.2002 அன்று சிவபதமடைந்த திருமதி பொன்னுச்சாமி சிவபாக்கியம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் உள்ளூரில் இருந்தும் வெளியூரில் இருந்தும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், எமது துயரினைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (16.12.2002) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (11798)

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*
- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 2003ஆம் ஆண்டுக்கான

# இலவச சீருடைகள் கூட்டுறவு சங்கம் ஊடாக

### விநியோகிக்கப்படும் என்கிறார் கல்வி அமைச்சர்

அரியாலை,டிசெ.16

அடுத்த ஆண்டு பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடைத் துணிகளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

சீருடைத்துணிகளின் விநியோகம் தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் பாடசாலைக் கல்வி அமைச்சர் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து பலநோ. கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சீருடைத்துணிகள் பொதிசெய்யப்பட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் என்றும்-

பின்னர் சங்கங்கள் தமது பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்த பொதிசெய்யப்பட்ட துணிகளை விநியோகிக்கும் என்றும் - அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலவச சீருடை துணிகளைப் பெறும் மாணவர்களுக்கு விசேட கூப்பன் ஒன்றும் வழங்கப்படும் என்றும் - கூறப்பட்டது. (எ-17)

### வழிப்பறிமுயற்சி முறியடிப்பு

அரியாலை, டிசெ.16

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள வீதியில் சைக்கிளில் சென்ற யுவதியின தங்கநகைகளை சூறையாடுவதற்கு எடுத்தமுயற்சி முறியடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சம்பந்தப்பட்ட பெண்ணை மடக்க முயற்சித்ததாகவும்-

அப்போது அந்தப்பெண் அவலக் குரல் எழுப்பியபடியே அருகில் இருந்த வீடு ஒன்றிற்குள் சென்று தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்கள் விரட்டிய போதும் திருடர்கள் தப்பிவிட்டனர். (ஒ-17)

### வாய்ப்பாட்டுப் போட்டி

அரியாலை,டிசெ.16

இளங்கலைஞர் மன்றத்தினர் 2003ஆம் ஆண்டுக்குரிய இசைவிழாவை முன்னிட்டு இம்முறை அகில இலங்கை ரீதியில் கர்நாடக வாய்ப்பாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

வெற்றி பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும் என மன்றப் பொருளாளர் சு.பாலசண்முகநாதன் தெரிவித்தார்.

இந்த கர்நாடக வாய்ப்பாட்டுப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் மன்றத்துடன் தொடர்புகொள்ளலாம் - என்றும். அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-17)

# துண்டி ஐயனார் ஆலயத்தில் பூசை நடத்த அனுமதிக்குக!

### மீளக்குடியமர்ந்தோர் படையினரிடம் கோரிக்கை

அரியாலை,டிசெ.16

கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயத்துக்குச் சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு அப்பகுதியில் உள்ள பொது அமைப்புகள் படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆலயத்தில் பூசை வழிபாடுகள் எதுவும் இன்றி இருப்பதாகவும் -

தற்போது கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதை அடுத்து ஆலயத்தில் பூசைகளை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனவே மேற்படி பகுதி மக்கள் ஆலயத்துக்குச் செல்லவும், அங்கு வழிபாடுகளை நிகழ்த்தவும் அனுமதி வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-17)


**லாலாவின்** வர்த்தக விளம்பர இலவச பத்திரிகை சேவை

அன்பார்ந்த மக்களே!


ஆற்றல் மிக்க அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க அறிஞர்களின் ஆலோசனைப்படி இந்தச் சேவையை நாம் நடத்த முன்வந்துள்ளோம்!

எமது ஈழமண்ணில் முதன்முறையாக 8 பக்கங்கள் கொண்ட மாதம் இருமுறை வெளிவரும் இலவசப் பத்திரிகையாக இதனைப் பிரசுரிக்க எண்ணியுள்ளோம் என்பதை எமது சோப் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

உரிமையாளர்,
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.
(C/25357)



## மிகவும் சிக்கனமானதும், ஆகுசெலவு குறைந்ததுமான அனல் ஃபக்ஸ் இயந்திரங்கள்



brother office network இலிருந்து

தரத்தை விட்டுக் கொடுக்காமல், உங்கள் அலுவலகத்தின் தொழிற்பாட்டு ஆகுசெலவைச் சாத்தியமானளவு மிகவும் குறைவாக வைத்திருக்க விரும்பினால், அதைச் செய்வதற்கு உலகின் பிரசித்தமான brother வகையிலான அனல் ஃபக்ஸ்கள் உங்களுக்கு உதவியளிக்கும். அது பற்றிப் பரிசீலித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஃபக்ஸ் இயந்திரமும்
* 20 பக்க ஞாபகசக்தி
* பதிலளிக்கும் இயந்திரம்
* 50 மீ. கடதாசிச் சுருள்
ஆகியவற்றை இணைத்துள்ளது.

office network
**ஒஃபிஸ் நெற்வேர்க் (பிறைவேற்) லிமிற்றெற்**
இல. 12, மகளின் வீதி, கொழும்பு - 8 தொ.பேசி: 390490-2
அவசர தொலைபேசி இல.: 074 713349
ஃபக்ஸ்: 074 713349 ஈ மெயில்: onl@sltnail.lk

வணிகர்கள்
கண்டி: 08 233593, 074 471402 • அநுராதபுரம்: 025-22073 • மாத்தறை: 041-21001-3 களுத்துறை (வடக்கு): 074-280719 • பொலன்னறுவை: 027-25626 • இரத்தினபுரி: 045-23779-80-81
பதுளை: 055-29505 • கம்பஹா: 033-27483 • குருநாகல்: 074-690501 • திருகோணமலை: 026-27256
யாழ்ப்பாணம்: 021-2222543

# கடந்த ஓராண்டு காலப்பகுதியில் ஐ.தே.மு. அரசு சாதித்தது என்ன?

ஐ.தே.முன்னணி அரசு பதவியேற்றுக் கடந்த 5ஆம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியடைந்துள்ளது. இந்த ஓராண்டுக்குள் அரசு ஈட்டிய சாதக மற்றும் பாதக நிலைகள் குறித்து "ஞாயிறு லங்காதீப" பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் ஆராய்கிறது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

ஐ.தே.முன்னணி பதவியேற்றுக் கடந்த 5ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது. பதவியேற்ற இப்புதிய அரசுக்கு இந்த ஒருவருட காலத்தில் பலவித சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. பல இடையூறுகள் மற்றும் தடைகள் ஆகியவற்றை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. பல தரப்பட்ட வெற்றிகளை ஈட்டிய போதிலும் அதைப்போன்றே பல பின்னடைவுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வித சவால்கள், இடையூறுகள் மற்றும் அவதூறுகள் ஆகியவை போன்றே வெற்றிகள் மற்றும் பின்னடைவுகளும் இந்நாட்டு

தமிழில்: விஜயஸ்ரீ

மக்களின் சாதாரண பொது வாழ்க்கையிலும் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக் காரணமாயின.

1983ஆம் ஆண்டுமுதல் இதுவரையில் இடம்பெற்ற யுத்தத்தின் துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்து, யுத்தம் காரணமாக உயிரிழப்பு எதுவுமின்றிக் கழிந்த ஆண்டாக இந்த ஆண்டை கருத முடியும். இதை இந்த நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் வாழும் சாதாரண பொதுமக்கள் ஈட்டிய பெரும் வெற்றியாகக் கருதமுடியும். ஐ.தே முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம் இந்தச் சமாதானச் சூழ்நிலையை உருவாகக முடிந்தது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக போர்நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அது மட்டுமன்றி, இந்நாட்டின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான புதிய சமாதான முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரையில் அச்சமாதான முயற்சிகள் தொடர்பான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே மேற்கொள்ளப்படும் பேச்சு உட்பட்ட சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நாடு பூராவிலும் பலவித எதிர்ப்பு அலைகள் தோன்றியிருப்பது உண்மையே. ஜனநாயக நாடொன்றில் வதியும் பல்வேறு மதங்களை பின்பற்றும் பலவின மக்கள் சமுதாயத்தினிடையே இவ்வகையான பலதரப்பட்ட கருத்துககளும், எதிர்ப்புணர்வுகளும் தோன்றுவது வழக்கமானதே. இருபது ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இவ்வேளையில், அது தொடர்பான பலதரப்பட்ட - பக்கச் சார்பானவை எனக் கருதத்தக்க - கருத்து வெளிப்பாடுகள், ஆலோசனைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுவது ஒன்றும் புதுமையானதல்ல. இன்னொரு வகையில் இவ்விதம் நீண்டகாலமாக ஒருவரோடு ஒருவர் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் ஒரேயடியாகத் தமது ஆயுதங்களைக் கைவிட்டு, பேச்சில் ஈடுபடவைப்பதும் இயலாத காரியம் என்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையாகும். இரு பகுதியினரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள சந்தேகத்தைக் கைவிட நீண்டகால அவகாசம் தேவைப்படும் இக்கால இடைவெளி ஓரிரு ஆண்டுகளுக்கும் மேற்படக்கூடும். ஒரு பகுதியினர்மீது மறு பகுதியினர் கொண்டுள்ள இச்சந்தேகத்தை அல்லது அவநம்பிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மூலமே போக்கிக்கொள்ள இயலும்.

உறுதியான அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாடு எட்டப்படும் வரை பேச்சுக்களில் பங்குகொள்ளும் இரு பகுதியினரிடையேயும் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு கருத்து மோதல்கள் ஏற்பட இடமுண்டு. இவை சமாதான முயற்சிகள் முறிவடையக் காரணமாக மாட்டா. அவ்வகையான கருத்து மோதல்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து உறுதியான இறுதித் தீர்வு நோக்கி பயணித்தல் வேண்டும். இந்த யதார்த்தத்தை இந்த நாட்டின் பெரும்பான்மை இன மக்கள் உணரவில்லை என்பதைக் கடந்த கால வரலாறு எடுத்துக்காட்டுகிறது. சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக சிற்சில பிரிவினர் எதிர்ப்பு தெரிவிக்காதது இவ்வுண்மையை உணர்ந்து கொண்டதனாலேயாகும்.

நாட்டில கடந்த ஒருவருட காலத்தில் மோதல்கள் எதுவும் இடம்பெறாமையாலும், பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாமையாலும் வடக்கு மற்றும் தெற்கில் வாழும் மக்களுக்கு சமாதானத்தின் பெறுமதி மிக நன்றாகப் புரிகிறது. ஆனால், நாட்டில் தற்போதுள்ள பொருளாதாரப் பின்னடைவு காரணமாக, சமாதானம் பற்றிய அவர்களது நம்பிக்கையிலும் வளர்ச்சி காணமுடியவில்லை.

இந்நாட்டின் பொருளாதாரம் இன்று அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது என்பதில் எவருக்கும் சந்தேகம் கிடையாது. 2000ஆம் ஆண்டில் பதவியேற்ற பொ.ஐ.முன்னணி அரசு பதவியேற்ற ஓர் ஆண்டுக்குள் பொதுமக்களின் ஆதரவை இழந்ததற்கான முக்கிய காரணம் இப் பொருளாதாரப் பின்னடைவே ஆகும்.

அப்படியான பொருளாதாரப் பின்னடைவு நிலையில் இருந்த நாட்டின் அதிகாரத்தை கையேற்று, ஒரு வருடத்தில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவது ஓர் இலேசான காரியமல்ல. பெரிய அளவிலான வெளிநாட்டுக் கடனுதவியைப் பெற்று சிறு அளவிலான பொருளாதார வளர்ச்சியின்மூலம் நாட்டைப் பொருளாதார முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கு எந்தவோர் அரசுக்கும் நீண்டகாலம் தேவைப்படும். இதற்காக உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளின் உதவியும் அவசியமாகும். அதேபோன்று நாட்டு மக்களின் உதவி ஒத்தாசைகளையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதன்மூலம் கடந்த ஓராண்டுக்குள் ஐக்கிய தேசிய முன்னணி அரசு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்ட சவால்களை குறைத்து மதிப்பிட இயலாது.

ஆனால், பொதுமக்கள் தரப்பில் இருந்து நோக்கும்போது அவர்களின் பெரும்பாலோர் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருப்பதாகக் கருதமுடிகிறது. கடந்த ஓராண்டு காலத்துள் அத்தியாவசியப் பொருள்களின் விலை வேகமாக உயர்ந்துள்ளது. அதைப் போன்றே போக்குவரத்துச் செலவு, தொலைபேசிக் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணம் ஆகிய மற்றைய செலவுகளும் பெருமளவில் உயர்ந்துள்ளன. அவ்வாறு பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் சேவைக் கட்டண அதிகரிப்பு ஆகியவற்றுக்குச் சமமாக பொதுமக்களின் வருமானத்தில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை. விசேடமாக அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. ஆகக்குறைந்த, இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சம்பள உயர்வு வழங்கப்படலாம் என்று அவர்களது எதிர்பார்ப்பும் சிதறடிக்கப்பட்டது.

## மாற்றார் தோட்டத்திலிருந்து....

இத்தகைய பின்னணியில் பொதுமக்கள் பெரும் பொருளாதாரச் சிக்கலில் அகப்பட்டுள்ளனர் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும். ஒரு நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வது ஒரு நீண்டகாலப் பணியாகும். இதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அத்திட்டங்களின் பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் குறிப்பிட்டதொரு காலப்பகுதி காத்திருக்க நேரிடும். இவை யாவற்றையும் அடையும் வரையில் பொதுமக்களால் பார்த்துக் கொண்டிருக்கவோ, கேட்டுக் கொண்டிருக்கவோ இயலாது. தமது பசியைத் தள்ளிப்போட பொதுமக்கள் தயாராயில்லை. ஆகவே, அபிவிருத்தி நடவடிக்கைகளின் பலாபலன் எட்டப்படும் வரையும் காத்துக் கொண்டிருக்காமல் பொதுமக்கள் அரசின் உதவியைப் பெற்றுக்கொள்ள அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கடந்த ஓராண்டு காலத்தில் பொதுமக்களுக்கு அரசினால் எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. பொதுமக்களின் வருமானத்தில் எவ்வித உயர்ச்சியும் ஏற்படாத நிலையில் பொருள்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்களில் உயர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள இச்சிரமமான நிலைமை தொடர்பாக அரசு இப்போதாவது கவனமெடுத்தல் வேண்டும். எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு பொதுமக்களுக்கு உதவியளிப்போம் என எண்ணக் கூடாது. பொருளாதாரச் சிரமங்கள் ஏற்படும் வேளையில் பொதுமக்கள் மத்தியில் தோன்றியுள்ள சமாதானம் பற்றிய அக்கறை குறைவடைய நேரிடலாம். சமாதானம் எட்டப்படுவதை விரும்பாத கூட்டத்தினரே இதனால் பயனடைவர். சமாதான முயற்சிகளைத் திசைதிருப்புவதன் மூலம் அரசியல் இலாபம் தேட முனைவோர் பலர் உள்ளனர். பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாது எந்த ஓர் அரசினாலும் உறுதியான ஆட்சி மேற்கொள்ள இயலாத நிலையில் அரசியல்வாதிகள் அபகீர்த்திக்கு உள்ளாவது கவலைக்குரிய விடயமாகும்.

எந்தவோர் அரசும் சிறப்பாக நிர்வகிக்கப்படுவதற்கு நாட்டில் சமாதானம் நிலவவேண்டியது அவசியமாகும். அதைப் போன்றே பொதுமக்களின் ஆதரவும் அவசியமானதாகும். நாடாளுமன்ற அங்கத்துவத்தால் மட்டும் அரசை நிர்வகித்தல் முடியாது. எனவே, சமாதானத்தை அடைவதில் நம்பிக்கை வைத்துச் செயற்படுவது மட்டும் போதுமானது அல்ல என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டியது முக்கியமானதாகும். அரசுக்கு தன் பயணத்தில் இன்னமும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியுள்ளது. அது மிகவும் சிரமமானதொரு பயணம் மட்டுமல்ல தடைகள் நிறைந்ததும் ஆகும். அவதானமின்றி பயணிக்க இயலாத பயணம் அது. பொதுமக்களின் ஆதரவுடன் பயணிக்கவேண்டிய பயணம் அது. எனவே, பொதுமக்களுக்கு வாழ வழியமைத்துக் கொடுக்கவேண்டியது அரசின் கடமையாகும்.

# உலக உதைபந்தாட்டத்தில் சிறந்த அணி விருது பிரேஸிலுக்கு

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த அணிக்கான விருதை பிரேஸில் அணி பெற்றுள்ளது.

அதே நேரம் சர்வதேச சம்மேளனத்தின் தர வரிசையில் மிக வேகமாக முன்னேறிய அணிக்கான விருதை மேற்காபிரிக்க நாடான செனகல் அணி பெற்றுள்ளது.

கடந்த வெள்ளியன்று சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் (ஃபீஃபா) இத்தகவலை வெளியிட்டுள்ளது.

1994 மற்றும் 1999ஆம் ஆண்டுகளிலும் சிறந்த அணிக்கான விருதை பிரேஸிலே பெற்றது. இவ்வருடமும் இந்த அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியதனால் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டதோடு சிறந்த அணிக்கான விருதையும் தட்டிச் சென்றுள்ளது.

கடந்த தடவை மட்டும் பிரான்ஸ் அணி இவ்விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸில் அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு முக்கிய பங்காற்றிய றொனால்டோ சிறந்த வீரருக்கான விருதை வெல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி ஸ்பெயினின் மட்றிட் நகரில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றின்போது இவ்விருதுக்குரியவர் பெயர் அறிவிக்கப்படவுள்ளது.

இதேநேரம் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக கோல்களை அடித்த வீரருக்கான தங்கக் காலணியும இந்த வைபவத்தில் வைத்து றொனால்டோவுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் முதற்றடவையாக கலந்துகொண்டு கால் இறுதிக்குத் தகுதி பெற்ற செனகல் அணி வேகமாக முன்னேறிய அணிக்கான விருதைப் பெற்றுள்ளது. இதன்மூலம் அந்த அணி தரவரிசையில் 40இடங்களைக கடந்து 29ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

புதிய தரவரிசையில் முதல் 10 இடங்களையும் பெற்றுக்கொண்ட அணிகளின் விவரம் வருமாறு:

1. பிரேஸில், 2. பிரான்ஸ், 3. ஸ்பெயின், 4. ஜேர்மனி, 5. ஆஜென்ரீனா, 6. இங்கிலாந்து, 7. மெக்ஸிக்கோ, 8. துருககி, 9. அமெரிக்கா, 10. நெதர்லாந்து. (ஒ-5)

# ஊக்க மருந்துப் பாவனை குறித்து வீரர்களுக்கு விளக்கம்

கொழும்பு,டிசெ.16

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துப் பாவனை குறித்து இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு விளக்கமளிக்கப்படுகின்றது.

- இவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அநுர தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் பெப்ரவரி முதல் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது முதற்றடவையாக வீரர்களிடம் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகளுக்கான சோதனை நடத்தப்படவுள்ளது.

வீரர்கள் எவரேனும் ஊக்க மருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு 2 வருடகால தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து இலங்கை வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதா? எனக் கேட்டபோதே அநுர தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஊக்க மருந்து சோதனை தொடர்பாக எமக்குக் கிடைக்கும் சகல தகவல்களையும் வீரர்களிடம் தெரிவித்துள்ளோம். அணி மருத்துவரான லலித் விஜேரட்ண இவ்விடயத்தை கையாள்கின்றார் என்றார். (ம-5)

## விளையாட்டு

# 20 வருடங்களின் பின்னர் மீண்டும் யாழ்.ஹொக்கி அணி தேசியப்போட்டிக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.16

கடந்த 20 வருட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி சிரேஷ்ட தேசிய ஹொக்கிப் போட்டியில் பங்குபற்றியுள்ளது.

கடந்த முதலாம் திகதி கொழும்பில் செயற்கை புற்றரையில் நடைபெற்ற சிரேஷ்ட தேசிய ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் முதனமுறையாக யாழ்.மாவட்ட அணி பங்குபற்றியது. திறமையாக விளையாடி பலரது பாராட்டுக்களையும் பெறறுக்கொண்டது.

இச்சுற்றுப்போட்டியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 12 அணிகள் பங்குபற்றின.

யாழ்.அணியில் கோல்காப்பாளராக விளையாடிய இ.ஷாஜகான் இலங்கை தேசிய அணிக்கு தெரிவு செய்வதற்கான பயிற்சி அணிக்கு தேசியத் தெரிவுக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-5)

# இலங்கை அணியில் மீண்டும் களுவிதாரண?

கொழும்பு,டிசெ.16

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்ற வீ.பி. கிண்ண ஒருநாள் கிரிக்கட் தொடருக்கான இலங்கை அணியில் களுவிதாரண மீண்டும் அணியில் சேர்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணி வீரர்களின் விவரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாதபோதும், விக்கெட் காப்பாளராக றொமேஸ் களுவிதாரண, வேகப்பந்து வீச்சாளர் நுவன் சொய்ஷா ஆகியோர் உட்பட 16 பேர் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர். (ம-5)



அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் பயிற்சிக் கல்லூரி, சிவலோகநாதக் குருக்கள் நூலகம் ஆகியவற்றின் நிரந்தரக் கட்டடங்களுக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. இந்நிகழ்வில் சமயக் கிரியைகள் நடப்பதையும், நல்லை ஆதீனக் குருமுதல்வர் பூசைப் பொருள்களை அடிக்கல் குழியில் இடுவதையும் அகில இலங்கை சைவக்குருமார் ஒன்றிய உபதலைவர் சுந்தரராஜக் குருக்கள் அடிக்கல் நடுவதையும் படங்களில் காணலாம். படங்கள்:பத்மராஜ்

# பயிற்சிக் கல்லூரி, நூலக அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

அகில இலங்கைச் சைவக் குருமார் ஒன்றியத்துக்கான அர்ச்சகர் பயிற்சிக் கல்லூரி, சிவலோகநாதக் குருக்கள் நூலகம் ஆகியவற்றுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

அடிக்கல் நடும் வைபவம் நேற்று முற்பகல் 1130 மணிக்கு திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் முன்றிலில் க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

பயிற்சிக் கல்லூரி கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்ட இடத்தில் அமைச்சர் மகேஸ்வரனால் கிரியைப் பொருள்கள் இடப்பட்டன.

அதன் பின்னர் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் பூஜைப்பொருள்களை அதே இடத்தில் இட்டார் தொடர்ந்து அகில இலங்கைச் சைவக்குருமார் ஒன்றிய உப தலைவர் சுந்தரராஜக் குருக்கள் அடிக்கல்லினை நட்டார்.

மிகவிரைவிலேயே இங்கு கட்டடங்கள் அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

பயிற்சிக் கல்லூரியும், நூலகமும் பயன்பாட்டுக்கு விரைவில் கொண்டு வரப்படும் என்றும் -

அகில இலங்கைச் சைவக் குருமார் ஒன்றியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ஞ-12-86)

NEW SCIENCE CENTRE
வெலிங்டன் சந்தி அருகில்
A/L 2004
"வெப்ப இரசாயனம்"
ஆரம்பம்:17.12.02 Tue. 9a.m.
"Inorganic Chemistry"
&
General வீட்டில்
Sat. & Sun. 7-8a.m.
(1830)
By:அன்பழகன்

## சங்கானையில் பாதீனியம் அதிகரிப்பு

சங்கானை,டிசெ.16

சங்கானை மண்டியக்குளம் பகுதி, வயல்வெளிகள் மற்றும் வளவுகளில் பாதீனியம் அதிகளவில் வளர்ந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக விவசாயத் திணைக்களத்தாலும், இப்பகுதி விவசாயிகளாலும் சிரமதான அடிப்படையில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-29)

## கடற்றொழில் சங்கங்கள் புனரமைப்பு

வலி.மேற்கு,டிசெ.16

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன.

மேற்படி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த பல வருடங்களாக செயற்படாமல் இருந்து வந்தன.

(எ-175)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நினைவஞ்சலியும்

மண்ணக வரவு 02 - 11 - 1937



விண்ணகச் செலவு 17 - 11 - 2002

அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

(சுபாஸ்கபே உரிமையாளர், பருத்தித்துறை)

அன்னாரின் நினைவாக இன்று (16.12.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் சபிண்டீகரண நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அத்துளு நீர்வழங்கல் திட்ட ஒழுங்கை,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.
(11840)
- குடும்பத்தினர்.

சுடர் ஒளி
விலை 14/=
17.12.2002 இதழில்




யாழ். கோட்டை மீண்டும்படைத்தளமா?
இந்தியாவின் கவனத்தை ஈர்க்கும் புலிகளின் குரல் சேவை விஸ்தரிப்பு
காணாமற்போனோரின் உறவினர் குடாநாட்டில் நடத்தும் போராட்டம்
தலைமைத்துவப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வந்த தீர்ப்பு
நாகப்பா கொலையால் தடுமாறும் தமிழக அரசு
மெகா சீரியல்களின் ஆக்கிரமிப்பும் மக்கள் எதிர்கொள்ளும் பரிதவிப்பும்

மற்றும் க்ரைம் டயறி,
இணையத் தளங்களிலிருந்து,
விளையாட்டு, சினிமா,
பித்தன் பதில்கள்,
இலவச மருத்துவ ஆலோசனை,
கவிதைப் புனல் உட்பட
பல்வேறு அம்சங்கள்

வாசிக்கும் நெஞ்சங்களை
யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை

# வட்டுக்கோட்டைப் பகுதியில் பாதீனியம் பரவும் ஆபத்து

அராலி,டிசெ.16

யாழ்.வட்டுக்கோட்டை வீதியின் இருமருங்கிலும் பெருமளவில் பாதீனியம் வளர்ந்துள்ளது.

இதனால், விவசாயிகள் தமது நெற்பயிர்களுக்கு நாசம் விளைவித்துவிடுமோ என அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் சிரமதானப் பணிமூலம் பாதீனியக் களைகளை அகற்றிவந்திருந்தனர்.

பருவமழை தொடர்ந்து பெய்வதையடுத்து தீவிரமாகப் பரவிவரும் பாதீனியத்தை அழிப்பதற்குரிய நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் - எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-ரி)

# கொடுப்பனவு அதிகரிப்பு

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திச் சங்கம் அமுல்படுத்திவரும் அங்கத்தவர்களுக்கான ஓய்வு மற்றும் மரணக் கொடுப்பனவுகளை அடுத்த வருடம்முதல் அதிகரிப்புச் செய்ய இருப்பதாக அதன் பொது முகாமையாளர் க.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

சங்க அங்கத்தவர்கள் ஓய்வுபெறும் வேளையில அல்லது இயற்கை மரணமடையும் வேளையில் இவர்கள் குடும்பத்தினருக்கு 5ஆயிரம் ரூபாவும், விபத்து மரணங்களின் போது 6ஆயிரம் ரூபாவும் தற்போது வழங்கப்பட்டுவருகின்றன.

சங்கம் பெற்றுவரும் லாபத்தின் ஒரு பகுதியை வங்கியில் வைப்புச் செய்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு 1998ஆம் ஆண்டுமுதல் இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வருடம் மேலும் அதிக பணம் இதற்கென வைப்புச் செய்யப்பட்டு அடுத்த வருடம்முதல் இக்கொடுப்பனவை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், இதுவரை 150 அங்கத்தவர்கள் இக்கொடுப்பனவுகளை பெற்றுள்ளனர் எனவும் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (ஏ-152)

## இந்தமாத இறுதிக்குள்

# வலி.வடக்கு மக்கள், குருநகர் மீனவர்கள் பிரச்சினைகளுக்கு முடிவுகாணவேண்டும்

## அமைச்சர் மகேஸ்வரன் வலியுறுத்து

மீளக்குடியமர்ந்த புன்னாலைக் கட்டுவன் வடக்குப் பகுதி மக்கள் வெளியேற்றப்பட்ட விவகாரம் மற்றும் மீன்பிடி தொடர்பாக குருநகர் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு இம்மாத முடிவுக்குள் முடிவு காணப்படவேண்டும்.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரிடம் தான் வலியுறுத்தியுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்.வந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை பலாலி படைத்தளத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீளக்குடியமர்ந்து இயல்பு வாழ்க்கைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகளான புன்னாலைக்கட்டுவன் பகுதி மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இதனால் இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ்மக்கள் மீதான கெடுபிடிகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

குருநகர் மீனவர்களின் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளுக்கும் இதுவரை முடிவு காணப்படவில்லை. அதுவும் தொடர்கிறது.


மீளக்குடியமர்ந்த மீனவர்களின் வாழ்க்கை வழமைநிலைக்குத் திரும்ப வேண்டுமானால் மீன்பிடி குறித்த அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படவேண்டும் - என்றார் அவர்.

இதற்குப் பதிலளித்த யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பாதுகாப்பு வலயத்தில் இருந்து உள்பக்கமாக 600 மீற்றர்வரை மக்கள் குடியமர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் -

இதன் அடிப்படையிலேயே புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்திக்கு அப்பால் குடியமர்ந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும் -

தெரிவித்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் அடுத்த மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டம் ஆரம்பிக்கும்போது தனது எதிர்ப்பைக் காட்டப்போவதாக தான் அவர்களிடம் கூறியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)



அராலி மத்திய பகுதியில் உள்ள குமுக்கன் குளம் நிரம்பி வெள்ளம் கரை தாண்டியுள்ளது. இதனால் அப்பகுதி குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்து விட்டது. நிரம்பிய குளத்தையும் குடிசை விடொன்று வெள்ளத்தின் முற்றுகைக்குள் சிக்கியிருப்பதையும் படங்களில் காணலாம்.

பருவமழைக் காலங்களில் மக்களுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் இக்குளத்தை புனரமைக்க வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை எழுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. *(அராலிச் செய்தியாளர்)*

# இலங்கை வங்கிக் கிளை அச்சுவேலியில் வேண்டும்!

## வர்த்தகர்கள் கோரிக்கை

அச்சுவேலி,டிசெ.16

அச்சுவேலியில் தற்போது செயற்படும் இலங்கை வங்கியின் கரும பீடத்தை இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையாக நிரந்தரமாகச் செயற்படுவதற்கு அனுமதி வழங்குமாறு அச்சுவேலி வர்த்தகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலியில் 2001ஆம் ஆண்டு இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை திறந்துவைக்கப்பட்டது. சாவகச்சேரிக்கிளை சொந்த இடத்துக்கு சென்ற பின்னர் சுன்னாகம் இலங்கை வங்கியின் நீடித்த கரும பீடம் அச்சுவேலியில் செயற்படுகின்றது.

அச்சுவேலிப் பகுதி வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு அச்சுவேலியில் செயற்படும் இந்தக் கரும பீடத்தை அச்சுவேலிக்கான நிரந்தர வங்கிக் கிளையாக தரமுயர்த்தி செயற்பட வைக்குமாறு அச்சுவேலி வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஓ-11)

# யாழ்.விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் இடர்பாடுகளும்

திட்டமிட்ட நீர்ப்பாசன வசதியின்மை, சரியான உரப்பசளை பாவனையின்மை, பல்வேறு வகையான நெற்பயிர் பாவனை, போதிய வேலையாள்கள் கிடைக்காமை, விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான பயிற்சி வகுப்புக்கள், ஊக்குவிப்புக்கள் வழங்கப்படாமை போன்ற பல்வேறு காரணங்களால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பூரண நெல் விளைச்சல் இல்லாமலிருப்பதாக விவசாயிகள் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஓர் ஏக்கரில் நெற்பயிர் செய்கையில் ஈடுபடும் ஒரு விவசாயி வருடத்தில் அமார் 4ஆயிரத்து 50ரூபாவையே வருமானமாகப் பெறமுடிகின்றது. (அட்டவணை 1)

போதிய வருமானம் பெறமுடியாமல் இருப்பதால் பல இளைஞர்கள் விவசாயத்தில் நாட்டம் கொள்வதில்லை.

விவசாயத் திணைக்களம் - விவசாயிகள், பொதுமக்கள் கூட்டாக இணைந்து செயற்படாதுவிடின் யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயச்செய்கை வெற்றிதரும் செயலாக அமையாது.

### திட்டமிட்ட நீர்ப்பாசனம்

தண்ணீர் கட்டுப்பாட்டில் இருந்தால்தான் விவசாயம் வெற்றியளிக்கும். சீரான நீரின்மை நெற்பயிர் செய்கையைப் பாதிக்கும்.

பூ 7 நாள், காய் 7 நாள், பழம் 7 நாள் என 21 நாள்கணக்கு நெற்பயிருக்கு எனக் கூறுவர். வயலில் இவ்வாறு 21 நாளுக்கு வெள்ளம் இருப்பின் போதுமானது. அதன்பின் ஈரலிப்பு நிலம் போதுமானது. நெல் முற்றும் வேளை மழை, வெள்ளம் ஏற்பட்டால் பாதிப்பு ஏற்படும். நல்ல இன நெல்லை விதைத்து, நல்ல விளைச்சல் கண்டவேளையில் மழை, வெள்ளம் ஏற்பட்டு பயிர்களை அறுவடை செய்யமுடியாமல் விவசாயிகள் கடந்த காலங்களில் நஷ்டத்தை எதிர்கொண்ட சந்தர்ப்பங்கள் உண்டு.

நீர் சரியாக இருப்பின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கென விவசாய திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட இனத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலை விடக் கூடிய விளைச்சலை விவசாயிகளால் பெறமுடியும் சரியான அளவு மழை வீழ்ச்சியும், காலநிலையும் அமைந்தால் யாழ். விவசாயிகளின் விடாமுயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

வன்னி மாவட்டத்தில் திட்டமிட்ட நீர்ப்பாசன முறையை பயன்படுத்தி விவசாய செய்கையில் வெற்றிகாண்கின்றனர். ஆனால், யாழ்.மாவட்டத்தில் இவ்வாறு செயற்படமுடியாதுள்ளது. இங்கு போதிய நீர்ப்பாசன குளங்களும், கால்வாய்களும் இல்லை. மழை வீழ்ச்சியை நம்பியே நெல் சாகுபடி மேற்கொள்ளவேண்டியுள்ளது. சீரான மழை வீழ்ச்சி கிடையாதுவிடின் விவசாயச் செய்கை பாதிப்படையும். வடகீழ் பருவப்பெயர்ச்சி மழையுடன் இங்கு விதைப்புக்காலம் ஆரம்பமாகிறது. இவ்வருடம் விதைப்புக்கேற்ப மழை பெய்யாவிடினும் 99 வீதமான விவசாயிகள் விதைப்பில் ஈடுபட்டனர். திடீரென ஒருநாளில் பெய்த பெரும் மழையினால் வயல்களில் வெள்ளம் நிறைந்தது. வெள்ளம் சற்றுக் குறைய பயிர்கள் ஓரளவு துளிர்விட மறுபடியும் மழைபெய்தமையால் பயிர்களுக்குத் தாக்கம் ஏற்பட்டுள்ளது. பயிர்களுக்கு உரிய வேளையில் தகுந்த முறையில் பசளையிடவோ, மருந்து அடிக்கவோ, களை எடுக்கவோ முடியவில்லை. இவை காரணமாக அறக்கொட்டியான் போன்ற புழுத் தாக்கம் அதிகரித்து, பயிர்கள் அரிக்கப்பட்டு, வெட்டப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளன.

| ஓர் ஏக்கருக்கான செலவும் - வருமானமும் | | | |
|---|---|---|---|
| செலவுகள் | ரூபா | வருமானம் | ரூபா |
| உழுது மறுக்க கூலி | 1000 | 60 புசல் நெல் | |
| மறு உழவு | 1000 | (20,22 மூடைகள்) | 20000 |
| 2 புசல் விதை நெல் | 1000 | சீரான வைக்கோல் | 2500 |
| 6 வண்டில் தொழு உரம் (எரு) | 2500 | | |
| களை நீக்கல் கூலி | 5000 | | |
| உரப் பசளை | 1750 | | |
| கிருமிநாசினி | 750 | - | |
| அறுவடைக்கூலி | 2000 | | |
| சூடு அடிக்க | 3000 | | |
| இலாபம் | 4500 | | |
| | 22500 | | 22500 |

அட்டவணை 1

### பசளை பாவனை

யாழ்.மாவட்ட விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் இயற்கைப் பசளைப் பாவனையைக் கைவிட்டு, இரசாயன பசளைகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இப்பசளைகளைப் பாவிக்கும் முறை, பயன்படுத்தும் அளவு என்பன சரியாகத் தெரியாமையால் பல கஷ்டங்களையும், இடர்களையும் அவர்கள் எதிர்நோக்குகின்றனர். உரத்தின் பாவனை அதிகரிப்பால் நெற்பயிர்களில் பச்சைத் தன்மை கூடுகின்றது. பச்சைத் தன்மை அதிகரிக்க நோய்த்தாக்கத்துக்குப் பயிர்கள் உள்ளாகின்றன. மடிச்சுக்கட்டி, கொக்கி நோய் போன்றன ஏற்பட்டு பயிர்கள் நாசமடைகின்றன. குறிப்பிட்ட வயல்களில் காணப்படும் இந்நோய்கள் அயல் வயல் பயிர்களுக்கும் பரவுகின்றன. இயற்கைப் பசளை இந்த மண்ணோடு இணைந்து நீண்ட காலம் செறிந்து இருப்பதுபோல செயற்கைப் பசளைகள் மண்ணோடு நீண்டகாலம் செறிந்து பயன்தரமாட்டாது.

வி.பி.சர்மா
வலி தெற்கு செய்தியாளர்

### பொலித்தீன் பாவனை

எரு, பசளை போன்ற இயற்கைப் பசளைகள் தற்காலத்தில் குப்பைகள், கஞ்சல்கள் என அழைக்கப்படுகின்றன. அவையும் தமது பெயர்களுக்கேற்ப வேண்டாத பொருள்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டுள்ளன.

சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ள பொலித்தீன் பைகள், டற்பசை உறைகள், 'போல் பொயின்ட்' பேனாக்கள், 'சம்பூ' உறைகள், சவர்க்கார உறைகள் போன்றன மண்ணில் புதைந்தாலும் அழியாதவை. அப்பொருள்கள் பசளைகளுடன் சேர்ந்து "குப்பை"



என்ற பதத்துக்கு வலுச்சேர்த்து வயல் மண்ணில் அடைந்து உக்கிவிடாது நிலைக்கின்றன.

### கிருமிநாசினி பாவனை

நெற்பயிருக்கு நன்மைகளைச் செய்யும் தும்பி, சிலந்தி, வண்டு போன்றவையும், மைனா, கிளி, ஆந்தை, கொக்கு போன்றவையும் கிருமிநாசினி தெளிக்கும்போது அவற்றில் நுழைந்திருக்கும் பூச்சிகள், புழுக்கள், உண்ணிகள் என்பனவற்றை உட்கொள்வதால் அழிந்துபோகின்றன. இது விவசாயிகளுக்கு ஒரு நஷ்டம் எனலாம். நவீன காலத்தில் களைகளை அழிக்கப் பலமுறைகளை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

நெல் விதைத்து மூன்று நாள்களுக்குள் கிருமிநாசினி அடிக்கலாம். இதனைத் தொடர்ந்து நல்ல மழை தேவை. சிறிதுசிறிதான மழை பெய்தால் களைகள்தான் கூடுதலாக வளரும். ஒருமாத காலம்வரை இதன் பயன்பாடு இருக்கும்.

நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் இரண்டு இலைப்பயிராகவுள்ள வேளையில் தகுந்த மருந்துகளை அடித்தலும் பயன்தரும் கூடிய அளவு நீர்ப்பாசன வசதி இல்லாத இப்பிரதேசத்தில் இவை வெற்றி தரமாட்டா.

கிடைச்சி, சோறை, வள்ளல் போன்ற கோரை, பசளி இனங்களுக்கு அவற்றுக்குத் தகுந்த மருந்து வகைகளைப் பாவித்தும் களைகளை அழிக்கலாம்.

### பல்வேறு இன நெல் பாவனை

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் பல்வேறு வகையான விதை நெல்களைப் பயன்படுத்துவதால் நெல் இனச்சுத்தம் பேணமுடியாது போகிறது. $H_4$, மொட்டைக்கறுப்பன், பெரியவெள்ளை, AT 402 என விவசாய திணைக்களம் அறிமுகம் செய்துள்ள பலவித விதைநெல்களை விதைப்பதால் தூய்மையான ஒரு

**செய்திக் கட்டுரை**

நெல் இனத்தை பேணிக்காக்க முடியாமல் உள்ளது சரியான அறுவடையும் பெறமுடியாதுள்ளது. யாழ்ப்பாணக் காலநிலைக்கு ஏற்ப ஓர் இன நெல்லை விவசாயத் திணைக்களம் இதுவரை சிபார்சு செய்யாதது ஒரு பெரும் குறைபாடு எனலாம்.

வெவ்வேறு இன நெல்களை விதைப்பதால் அறுவடைக்காலத்தில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. விளைந்த நெல் அறுவடை செய்ய வேண்டி, இயந்திர சாதனங்களை விளையாத நெற்பயிர் உள்ள காணிகளை ஊடறுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் முற்றிய நெல்லின் அறுவடைக்காலம் தாமதமடைவதால் அவை பாதிப்படைகின்றன.

எனவே, யாழ்ப்பாண மாவட்டத்தின் சீரற்ற காலநிலையைக் கருத்திற்கொண்டு விவசாய செய்கையில் வெற்றிகாண விவசாயிகளும், விவசாயத்திணைக்களமும், மக்களும் கூட்டாக இணைந்து திட்டமிட்டு செயற்படவேண்டியது அவசியம்.

# பலஸ்தீனர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்துகிறார் லேடன்!

## யஸீர் அரபாத் குற்றச்சாட்டு

லண்டன்,டிசெ.16

சுதந்திரத் தாய்நாட்டுக்காகப் போராடும் பலஸ்தீனர்களின் போராட்டத்தை ஒஸாமா பின்லேடன் கொச்சைப்படுத்துகிறார்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்.

லண்டனில் இருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அரபாத் இதனைத் தெரிவித்தார். இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-





பேரணி ஒன்றில் பின்லேடனின் படத்துடன் பலஸ்தீனப் பெண்கள்

பலஸ்தீனப் போராட்டத்துக்கு ஒஸாமா பின்லேடன் ஒருபோதும் உதவியதில்லை. அவர் முற்றிலும் மாறுபட்ட பிரதேசத்தில் எமது ஈடுபாட்டுக்கு அப்பாற்பட்டு பணியாற்றுகிறார்.

பலஸ்தீன விடுதலைப் போரை ஒஸாமா பின்லேடன் தனது சுய தேவைக்காக வழிநடத்த முனைகிறார்.

சமீபத்தில் கென்யாவில் இஸ்ரேலியத் தங்கும் விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர்.

அல்கெய்டாவினர் இத்தகைய தாக்குதல்களை நியாயப்படுத்துகின்றனர். பலஸ்தீனத் தீவிரவாதிகள் மீது இஸ்ரேலுக்கு கோபமூட்ட இந்தத் தாக்குதல்களை அவர்கள் மேற்கொள்கின்றனர் என்றார் அரபாத்.

லெபனானிலும் காஸா பிரதேசத்திலும் அல்கெய்டாவினர் செயற்படுவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் இம்மாத ஆரம்பத்தில் கூறியிருந்தார்.

இது தொடர்பாக அரபாத் கூறுகையில், பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் மேற்கொள்ளும் அராஜகங்களை மூடிமறைக்க இஸ்ரேலியப் பிரதமர் கைக்கொள்ளும் தந்திரம் இது என்று தெரிவித்தார்.

சமீபகாலங்களில் பலஸ்தீனர்கள் மத்தியில் ஒஸாமா பின்லேடனின் செல்வாக்கு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

**தென்கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த இருவர் சென்ற கவசவாகனம் மோதி தென்கொரிய மாணவிகள் இருவர் உயிரிழந்தனர். இது தொடர்பான வழக்கில் அமெரிக்கப்படையினர் இருவரும் தென்கொரிய நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 50 ஆயிரம் தென்கொரியர்கள் தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் எடுக்கப்பட்ட படம்.**






## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன் பொன்னையா சிவகுமார்
அவர்களின் அன்புத் தாயார்

### பொன்னையா கனகம்மா

அன்னார் 13.12.2002 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு நாம் ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞானபீட 3 ஆம் வருட "A" பிரிவு மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம். (11843)



## மரண அறிவித்தல்

### கனகசபை கருணானந்தன் (கருணா)

(கணேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் முன்னாள் அள./மல். ப.நோ.கூ.ச.இயக்குநர் சபை உறுப்பினரும் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்)

அளவெட்டி வடக்கு, கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கருணானந்தன் அவர்கள் நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தேவரஞ்சினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை - மங்களேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரம்தேவராஜா மற்றும் நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கிருஷ்ணப்பிரியா, பிரியடர்சினி, ஜனார்த், ஆரணி, கபிலன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் நற்குணசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான பத்மநாதன் (மட்டக்களப்பு), அருளானந்தன் மற்றும் திருமதி சிவகாமசுந்தரி - கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர் - அளவெட்டி வடக்கு ஆ.மி.த.க.பாடசாலை), நித்தியானந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜேந்திரன், திருமதி சறோஜினிதேவி - பாலசுந்தரன், பாலச்சந்திரன், அசோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தேவரஞ்சினி
(மனைவி)

*கணேஸ்வரம்,*
*அளவெட்டி* (11849)


## வடகொரியா எச்சரிக்கை!

லண்டன்,டிசெ.16

வடகொரியாவின் அணு ஆராய்ச்சி நிலையங்களை மூடி வைக்கப்பட்டுள்ள சீல்களையும், அங்குள்ள கண்காணிப்புக் கமெராக்களையும் ஐ.நா. விலக்கிக்கொள்ளவேண்டும் இந்தக் கோரிக்கை உதாசீனப்படுத்தப்பட்டால் அவற்றை விலக்க தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

1994இல் எற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி வடகொரியாவின் அணு மையங்கள் மூடி சீல் இடப்பட்டன.


**Vacancy For A Teacher in Shorthand/Typewriting**

Applications are called from experienced Teachers to teach Shorthand / Typewriting for students in English and Tamil in our Stenography unit.

Suitable candidates are requested to present themselves for an interview at this office on **Saturday the 21st December 2002 at 10.00A.M.**

**Director**
**IIS, Jaffna.**


## தீவிரவாதத் தலைவர்களை படுகொலை புரிய சி.ஐ.ஏக்கு அங்கீகாரம்

லண்டன்,டிசெ.16

தீவிரவாதத் தலைவர்களை அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை சி.ஐ.ஏ. படுகொலை செய்ய அமெரிக்க அதிபர் புஷ் அங்கீகாரமளித்து விட்டதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 12 பெயர்கள் அடங்கிய தீவிரவாதத் தலைவர்களின் பட்டியலை வெள்ளைமாளிகை தயாரித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

உலகில் படுமோசமான தீவிரவாதத்தலைவர்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் -

உயிருடன் பிடிக்கமுடியாதபோது, மக்களின் உயிர் உடைமைகளுக்கு குறைந்த சேதத்தை ஏற்படுத்தி அவர்களை கொல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டவர் மற்றும் நிலைகள் மீது ரகசியத் தாக்குதல்களை சி.ஐ.ஏ. மேற்கொள்ள 1976ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபர் ஜெரால்ட் போர்ட் தடை விதித்தார். இதனால் ஒவ்வொரு ரகசியத் தாக்குதலுக்கும் பிரத்தியேக அனுமதியை சி.ஐ.ஏ. பெறவேண்டியிருந்தது. தற்போது அதிபர் புஷ் அத்தடையை நீக்கி படுகொலைகள் புரிய சி.ஐ.ஏக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் யேமனில் காரொன்றில் சென்றுகொண்டிருந்த 6 அல்கெய்டா முக்கியஸ்தர்கள் ஆளற்ற விமானம் ஒன்று நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இது சி.ஐ.ஏயின் நடவடிக்கை என்றே நம்பப்படுகிறது.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் 10 நாடுகள் இணைகின்றன

கோபன்ஹேகன்,டிசெ.16

ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலும் 10 நாடுகளைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து அதன் பலம் 25 ஆக உயருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 2 நாள் மாநாடு டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகரில் நடந்தது. தற்போது இந்த அமைப்பில் 15 நாடுகள் உள்ளன. இதில் சேருவதற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பல விருப்பம் தெரிவித்து இருந்தன. இது பற்றி கோபன்ஹேகன் நகர மாநாட்டில் முக்கிய முடிவு எடுக்கப்பட்டது.

சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்டோனியா, ஹங்கேரி, லாத்வியா, லிதுவேனியா, மால்டா, போலாந்து, சுலோவேனியா, சுலோவாக்கியா ஆகிய 10 நாடுகளையும் 2004 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்த்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இந்த 10 நாடுகளும் அமைப்பில் சேருவதற்கு முன்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி இது தொடர்பாக மக்கள் விருப்பத்தை அறிய வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவுறுத்தியுள்ளது.

உலக அரங்கில்

இந்த 10 நாடுகளில் 8 நாடுகள் ரஷ்ய ஆதரவு கம்யூனிச நாடுகளாக இருந்ததால் வாக்கெடுப்புக்கு வலியுத்தப்பட்டுள்ளது.

மேலும், பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகியவை 2007ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் துருக்கியை உடனடியாகச் சேர்த்துக்கொள்வதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தனிப் பெரும்பான்மையுடன் குஜராத் தேர்தலில் பா.ஜ.க. பெரும் வெற்றி

அஹமதாபாத்,டிசெ.16

இந்தியாவின் குஜராத் மாநில சட்டப்பேரவை தேர்தலில் 181 தொகுதிகளுக்கு தேர்தல் நடந்தது. இதில் 125 தொகுதிகளை கைப்பற்றியுள்ளது பா.ஜ.க. காங்கிரஸ் 52 தொகுதிகளிலும், சுயேச்சைகள் உள்ளிட்ட பிற கட்சியினர் 4 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

தனிப் பெரும்பான்மையுடன் பா.ஜ.க. வென்றுள்ள நிலையில், நரேந்திர மோடி மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்பார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, வதோதரா தொகுதியில் கார்ச்சிக்வடா மற்றும் மச்சிபீத் ஆகிய இடங்களில் கலவரம் ஏற்பட்டது.


## மரண அறிவித்தல்கள்

### நல்லையா குமாரலிங்கம் (ஊரெழு)

(மஸ்கன் கொம்பனி, நீர்கொழும்பு)

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லையா குமாரலிங்கம் நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் கருணாலட்சுமியின் அன்புக் கணவரும் பாலகௌரி, சாந்தகௌரி, அருட்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் 18.12.2002 புதன்கிழமை நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.* (11844)

தகவல்:
திருமதி த.கந்தையா
(மாமியார்)

### திருமதி பரமேஸ்வரி துரை

உடுவிலைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி துரை நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையின் (முன்னாள் அதிபர் - பூநகரி) அன்பு மனைவியும் ராஜசூரியன் (இத்தாலி), காலஞ்சென்ற அருணராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் நிமல்ராஜ், அன்புராஜ், அரவிந்தன் (மாணவர்கள் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), அமலராஜ் (வவுனியா), ஏஞ்சல் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு (புதிய நேரம்) உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.* (11847)

தகவல்:
நிமல்ராஜ்

## விற்பனைக்கு

புதிய, பழைய வீடியோ படக் கொப்பிகள் விற்பனைக்கு உண்டு.

பிரகாஸ்ராஜ்
மடத்தடி, அல்வாய்.
T.P.: 0777-115292 (11839)

செ.அ.ஞானச்சந்திரன்
(கி.சே.அ.).


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வேலாயுதம் (மெக்கானிக்கர்)

நீர்வேலி வடக்கு, காளி கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட மெக்கானிக்கர் முருகேசு வேலாயுதம் நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை (தாவடி), இரத்தினம் - தங்கச்சியம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை - சொர்ணம் (தாவடி) மற்றும் இராசதுரை - இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவியாக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நீர்வேலி.* (11837) வே.மகேஸ்வரி (மனைவி)

## திருமதி செல்லத்துரை அம்மாக்குட்டி

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை அம்மாக்குட்டி அவர்கள் 14.12.2002இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பையா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் சிவனேஸ்வரி (ஓய்வுபெற்ற மருத்துவ தாதி), தவரத்தினம் (லண்டன்), செல்வராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகநாதன் (சிங்கப்பூர் பார்மசி உரிமையாளர், கிளிநொச்சி), தவமலர் (லண்டன்), தேவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌரி, சண்முகராசா (சண்முகம் களஞ்சியம், வட்டுக்கோட்டை), சதீஸ்குமார் (லண்டன்), சதீஸ்வரன் (லண்டன்), சதீஸ்வரி (லண்டன்), சதீசினி (லண்டன்), கோகுலசக்தி, கண்ணன் (ஜேர்மனி), தரிசி - பிரபா (ஜேர்மனி), சிவரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கண்ணன், சரணின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது "அன்னை இல்லத்தில்" நடைபெற்றுப் பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அன்னை இல்லம்",*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (11835)

தகவல்:
செ.தவரத்தினம் (மகன்),
ச.குகநாதன் (மருமகன்).

## கிறிஸ்தோப்பிள்ளை அமிர்தநாதர் (அமுதர்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பிள்ளை அமிர்தநாதர் 14.12.2002 சனிக்கிழமை புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில் காலமானார்.

அன்னார் செபமாலை அம்மா (சின்னப்பிள்ளை)யின் அன்புக் கணவரும் மேரி பெர்னதேத்தம்மா (சின்னராணி), மேரி அஞ்சலா (மாங்கண்டு - டென்மார்க்), மரியமலர் (மலர்), மேரி அயலின் (புஸ்பம்), எட்வேட் இராசவரோதயம் (சற்குணம் - பிரான்ஸ்), மேரி பவளராணி (ஆசிரியை - இரணைப்பாலை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியதாஸ், மரியாம்பிள்ளை (டென்மார்க்), அந்தோனிப்பிள்ளை (துரைசிங்கம்), அருள்தாஸ் (முனை - க.தொ.கூ.சங்கத் தலைவர்), ஞானமலர் (பிரான்ஸ்), பீற்றர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயக்கொடி (டென்மார்க்), ஜெயராணி, ஜெயமலர், மரியலைசா (சுருக்கெழுத்தாளர் - முல்லை பி.செயலர் பணிமனை), ரேணுகா (ஜேர்மனி), ஞானசீலன் (டென்மார்க்), நிக்ஸன் (டென்மார்க்), அருள்மாறன் (ஜேர்மனி), காலஞ்சென்ற அருள்தாஸ் மற்றும் அகிலா, அரவிந்தன் (பிரான்ஸ்), யசோதா, ரவி (ஜேர்மனி), குமுதா, பரிதா, சரிதா, அமல்ராஜ், கனிதா, தயான் (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), தயானா (பிரான்ஸ்), தயா (பிரர்ன்ஸ்), விக்ரர், அன்பரசி, வளர்மதி (டென்மார்க்), அன்ரன், குணம், துரையையா (ஜேர்மனி), போல்ரஜனி (ஜேர்மனி), வியோனி (டென்மார்க்), சுதாகர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின். நல்லடக்க ஆராதனைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சின்னத்தோட்டம்,*
*கடற்கரை வீதி (முனை),*
*பருத்தித்துறை.* (11836)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## திருமதி இளையதம்பி இலட்சுமி

கொட்டோடை அம்மன், குடத்தனையைச் சேர்ந்த திருமதி இளையதம்பி இலட்சுமி அவர்கள் நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஜெயக்கொடி மற்றும் நவரத்தினம் (வட்டக்கச்சி), சிவசுப்பிரமணியம் (மதுவரிப் பாதுகாவலர் - யாழ்ப்பாணம்), சதாசிவம் (ஆசிரியர், அ.மி.த.க.பாடசாலை, குடத்தனை), சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணிதேவி, குணரஞ்சிதம், ராதா, பிரேமலா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவதர்சன், விஜிதரன், மயூரா, சிவதரன், நிஷாந், நிகிந்திகா, நிருசாந், பிரசாந், தீபிகா, தாரகா, கிரிஷாந், பேபிகா, துளசிகா, சேமளா, தவசிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.12.2002) திங்கட்கிழமை 11.00 மணியளவில் தும்பளை வெளிச்சவீட்டடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*உடையாவளவு,*
*தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.* (சி-25424)

தகவல்:
இ.சிவசுப்பிரமணியம்,
இ.சதாசிவம்
(மக்கள்)

## முனீஸ்வரன் வீதியிலும் போக்குவரத்து நெரிசல்

நடைபாதைக் கடைகள் போடப்பட்டுள்ள யாழ்.முனீஸ்வரன் வீதியில் வாகனப் போக்குவரத்து இடம்பெறுவதால் வியாபாரிகளுக்கும் பாதசாரிகளுக்கும் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரப் பகுதியில் சன நெரிசலைக் குறைக்கும் நோக்குடனேயே நடைபாதை வியாபாரம் முனீஸ்வரன் கோயில் பகுதிக்கு மாற்றப்பட்டது எனினும் தற்போது அப்பகுதியில் வியாபாரம் களை கட்டி வருகிறது. இந்நிலையில் அந்த வீதி ஊடாக பார ஊர்திகள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்தும் அதிகளவில் இடம் பெறுகிறது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகளும் பொது மக்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து ஆவன செய்யவேண்டும் என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-12)

## வங்கியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு

ஓய்வுபெற்ற வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வுக்கு வங்கியாளர் சங்கத் தலைவரும் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை முகாமையாளருமாகிய எஸ். ரகு தலைமை வகித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

வங்கிகளின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வு பெற்ற வங்கியாளர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஓய்வுபெற்ற வங்கியாளர் சார்பாக எஸ்.மோசஸ் உரையாற்றினார். இவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதியாக சங்கீத வித்துவான் எஸ்.வாமதேவனின் பாட்டுக் கச்சேரியும் இடம்பெற்றது.(ஒ-4)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 431 |
| திகதி | 13.12.2002 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல. 5615707-5628709

வெற்றி இலக்கங்கள் 24 31 42 46

லக்கினம் கன்னி



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,638,650/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 285,992 | 10 | 2,859,920 |
| 2 இலக்கங்கள் | 26,112 | 20 | 522,240 |
| 1 இல + லக்கினம் | 25,945 | 30 | 778,350 |
| 2 இல + லக்கினம் | 2,469 | 100 | 246,900 |
| 3 இலக்கங்கள் | 710 | 500 | 355,000 |
| 3 இல + லக்கினம் | 63 | 5,000 | 315,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 341,294 | - | 5,377,410 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 5,377,410/-

தொடர் இல. 4632326க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5624974-6-83
5622309-0-57
5626168-6-02
5619388-8-22
5617923-9-17

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3257282 இருந்து 3274249 வரை
சீட்டிழுப்பு இல. 1358
திகதி 14.12.2002



வெற்றி எண்கள் 02 04 18 47 53

போனஸ் எண் 17

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 106 | 10,000/- | 1,060,000/- |
| 3 | 5,351 | 500/- | 2,675,500/- |
| 2 | 89,797 | 20/- | 1,795,940/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 109,840 | 10/- | 1,098,400/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,927,840/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 2,347,150/-

தொடர் இல. 2280648க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 18ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3269459-1-46
3260518-9-27
3259921-6-85
3265047-0-62
3259243-9-25

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் அருளானந்தம் தணிகாசலம்

(முன்னாள் பெரியகடை மார்க்கட் வியாபாரி)

மண்ணில் 14.03.1928 — விண்ணில் 16.11.2002

அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் – இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
முப்பத்தொருநாளும் ஆயிற்றோ முழுநிலவு – மறைந்து
எப்போதும் உங்கள் முகம் எம்முன்னே – தோன்றுது ப்பா.

உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!
ஓம் சாந்தி!

*1/3, பலாலி றோட், 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (11834)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். சிறுப்பிட்டியைச் சேர்ந்த **அல்லிக்குட்டி கந்தசாமி** அவர்கள் இந்தியா திருச்சி மாவட்டத்தில் 13.12.2002 வெள்ளிக்கிழமை காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரடைவதோடு இன்று (16.12.2002) திங்கட்கிழமை திருச்சியில் நடைபெறும் அன்னாரின் இறுதிக்கிரியைகளை முன்னிட்டு எமது இல்லத்தில் அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

*சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.* (11841)

அ. கமலாதேவி குடும்பத்தினர் (சகோதரி)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**வீரகத்தி செல்வராஜா**

தோற்றம் 03.01.1937 — மறைவு 27.12.2001

ஓராண்டு மறைந்தாலும்
எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகள்
மறையவே மறையாது!

– துயருறும்:
குடும்பத்தினர்.

தகவல்:
ஞானசேகரம் (சொக்சன்).
*கலாசாலை வீதி, திருநெல்வேலி.* (11829)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி அதிபர் **திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம்** அவர்களின் அன்புச் சகோதரர்

**வேலுப்பிள்ளை செந்தில்நாயகம்**

அவர்கள் காலமாகியதையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (11827)

## சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை

வலி.வடக்கு,டிசெ.16

கோண்டாவில் வாகீஸ்வரி சன சமூக நிலையம் மற்றும் கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் ஒன்றிணைந்து அப்பகுதியில் சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக காய்ச்சல், வயிற்றோட்டம் முதலிய நோய்கள் பரவிவரும் இவ்வேளையில், இப்பகுதி இளைஞர்கள் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ளமை பலராலும் பாராட்டப்படுகின்றது.

கோண்டாவில் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் இணைந்து வீடு வீடாகச் செல்லும் இவர்கள் சுகாதாரம் சம்பந்தமான பிரசாரங்களைச் செய்துவருகின்றனர். (எ-86)

## 6 ஆயிரம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படும்

தென்மராட்சி,டிசெ.16

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஈடாக, மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் 6 ஆயிரம் தென்னங் கன்றுகளை வழங்குவதற்கு தென்னை அபிவிருத்திச் சபையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

வீட்டுத் தோட்டப் பயிராக தென்னைச் செய்கையை மேற்கொள்ளும் குடும்பங்களுக்கே இவ்வாறு தென்னங் கன்றுகள் ஜனவரி மாதத்தில் வழங்கப்படவுள்ளன என தென்னை அபிவிருத்தி அலுவலர் தெரிவித்தார்.

தென்னை மரங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விவரங்களை வழங்குமாறு பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-117)

## ஒளிவிழா

தென்மராட்சி,டிசெ.16

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள ஒளிவிழா நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். தம்பிமுத்து தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பங்குத் தந்தை அருட்திரு ரவிச்சந்திரன் அடிகள் கலந்துகொள்வார். (எ-117)

☆ ☆ ☆

குருநகர்,டிசெ.16

யாழ்.மறை மாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களின் ஒளிவிழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மறைக் கல்வி நிலையத்தில் மறை ஆசிரியர் எஸ்.சௌந்தரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். மறைக்கல்வி இயக்குநர் வண.பிதா யோண் மௌலிஸ் அடிகள் ஒளியேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்துவைப்பார். யாழ்.மறைக் கோட்ட முதல்வர் வண.பிதா மைக்கல் சௌந்தர நாயகம் அடிகள் பிரதம விருந்தினராகவும், யாழ்.மறைக்கல்வி நிலைய முன்னாள் இயக்குநர் வண.பிதா நேசராஜா அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-51)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் இந்து அறநெறிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப் படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## கிணற்றில் தவறி வீழ்ந்த யுவதி உயிரிழந்தார்

நள்ளிரவு வேளை இயற்கைக் கடன் கழிப்பதற்காக தண்ணீர் அள்ளச்சென்ற யுவதி ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து பலியானார் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி கோவில் குடியிருப்பு பொன்னம்பலம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை ரஞ்சினிதேவி (வயது 35) என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

இவரது மரணம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-117)

## கண்ணீர் அஞ்சலி

**கந்தர்மடம், பழம் வீதி, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குருவும் ஆலய தர்மகத்தாவுமான சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் அன்புத் துணைவியார்**

## இராஜலெட்சுமி அம்மா

**அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையுடன் அன்னாரைப் பிரிந்து வேதனையுறும் ஐயா அவர்களுக்கும், அவர்களின் மக்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*கந்தர்மடம்.* (11833) கந்தர்மட பழம் வீதி, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய திருப்பணிச் சபையினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோமாஸ்கந்தக்குருக்கள் இராஜலெட்சுமி

நீராவியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமாஸ்கந்தக்குருக்கள் இராஜலெட்சுமி காலமாகிவிட்டார்.

இவர் கந்தர்மடம், பழம் வீதி சித்திவிநாயகர் ஆலய ஆதீன தர்மகர்த்தா சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், ஜெகநாதஐயர் - ரங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், பரமேஸ்வரக் குருக்கள் - சரஸ்வதி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், உஷா, சிறினிவாசன் (பிரான்ஸ்), சந்திரசேகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசாக்குருக்கள் (பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயில்), ஜெகதாம்பாள் (கனடா), வசந்தாதேவி (கொழும்பு), லலிதாம்பாள் (மட்டக்களப்பு), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணிய ஐயர், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) காலை 10.00 மணியளவில் 20/1, பசல் லேன், வெள்ளவத்தை கொழும்பிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொஹுவலை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20/1, பசல்லேன், கொழும்பு. T.P.01.559685* (11832)

தகவல்:-
ஸ்ரீலஸ்ரீ உ.கிருபானந்தக் குருக்கள்.
கந்தர்மடம் பழம் வீதி,
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு.

### திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா)

புலோலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை அவர்கள் நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஓவசியர், P.W.D.) அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வைரியபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை, சுப்பிரமணியம், ரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கஜெயமணிராசா (சவூதி), தங்கதவமணிதேவி, தங்கநவமணிநாதன் (T.O., R.D.D), பத்மாவதி, கமலாதேவி, இராஜலஷ்மி, சந்திரா, சூரியகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வம், சண்முகநாதன் (ஓய்வுபெற்ற மேலாளர்), சாரதாதேவி, ஸ்ரீஸ்கந்தராசா (ஓய்வுபெற்ற துறைமுக அதிகாரசபை மேற்பார்வையாளர்), கந்தசாமி (புகையிரத சாரதி), யோகநாதன் (Engineer - Oman), ஸ்ரீதரன் (Leela Engineers Pvt.Ltd), நந்தினி (London) ஆகியோரின் அன்பு மாமியாரும் வேணி (B.Sc.) - தேவகிருஷ்ணன் (லண்டன்), மஞ்சுளா (B.A. சமுர்த்தி முகாமையாளர்), சுதாகர் (B.Com., Education, Dep.), மேகலா (B.A), சங்கர், நளினி - தர்மலிங்கம் (ஜேர்மனி), உமாகாந்தன் (Engineer), ஜெயந்தி (Accountant, கனடா), காமினி (Dr.) - மனோகரன் (Accountant கனடா), வசந்தி (M.Sc.) - செந்தூரன் (Dr. ஆஸ்திரேலியா), ரவிசங்கர் - ரஜினி, மாதங்கி, சத்தியன், சாந்தி (Engineer) - விக்னராஜா (Engineer), சுமதி (B.Sc.) - செல்வக்குமார் (Engneer - சிங்கப்பூர்), சிவகுமார் (T.O. R.D.D), அகிலன் (I.T.மொறட்டுவ பல்கலைக்கழகம்), நாவேந்தன் (Engineer), பிரதீபா (பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடம்), திருமாறன், (பேராதனை பொறியியல் பீடம்), பூங்கழலோன், உதயன், பூரணி, இளங்கீரன், சேரன், அபிநயா மற்றும் சாமந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குறிஞ்சிமாறன், பவித்ரா, துளசிமாறன், பகீரதன், இங்கிதன், முல்லைநிலவன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு, புலோலி* (11832)

தகவல்:-
குடும்பத்தினர்

### திருமதி நாகேஸ்வரி நாகேந்திரம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவா என்று அன்பாக அழைக்கப்படும் நாகேஸ்வரி 14.12.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு - யோகம்மாவின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - உமையாச்சியின் மூத்த மருமகளும் பாஸ்கரன் (நோர்வே), ரூபாகரன் (கனடா), ரஜனி, ரஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தி (நோர்வே), தெய்வேந்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் கேதீஸ்வரன், சந்திரேஸ்வரன் (ஜேர்மனி), அழகேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற லோகேஸ்வரன் (அஜந்தா போட்டோ உரிமையாளர்), மகேஸ்வரன் (ஜேர்மனி), ரமேஸ்வரன் (கனடா), நகுலா, மாலா ஆகியோரின் அருமைச் சகோதரியும் இராசையா, சந்திரபோஸ் (ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி), அல்லிராணி (ஜேர்மனி), பவானி (ஜேர்மனி), பாமா (ஜேர்மனி), அஜந்தா (யாழ்.மாவட்ட நீதிமன்றம்), கல்பனா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 463, நாவலர் றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.* (11842)

தகவல்:
சி.நாகேந்திரம்
(அன்புக் கணவர்)

# இருபாலை கிழக்கு, தெற்கு மக்கள் நல்ல தண்ணீர் இன்றி பெரும் சிரமம்

இருபாலை தெற்கு,இருபாலை கிழக்கு பிரதேச மக்கள் நீண்டகால மாக குடிதண்ணீர் பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்றனர். கோப்பாய் பிர தேச செயலர் பிரிவுக்குள் அடங்கும இந்தப் பிரதேசத்தில் நீர் விநியோகத திட்டம் எதுவும் இல்லை.

மிகவும் பின்தங்கிய பிரதேசமான இருபாலை கிழக்குப் பிரதேசத்திற்கு வலி. கிழக்கு பிரதேச சபை மட்டுப்படுத் தப்பட்ட அளவில் பவுஸர் மூலம் குடி தண்ணீர் விநியோகித்து வருகிறது.

புதிய செம்மணி வீதி, குளுக்கண்டி வீதி,சின்னக் கோயில் தெரு, வேளா தோப்பு ஆகிய வீதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான குடும்பங் கள் கட்டைப்பிராய் அம்மன் கோயி லுக்கு சொந்தமான நல்ல தண்ணீர்க் கிணற்றிலேயே தமது பாவனைக்குரிய குடிதண்ணீரைப் பெற்றுவருகின்றன.

இப்பகுதிக்கு குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிவருகின்றனா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக் குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து இப்பகு திக்கு நீர் விநியோகத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க நிதியுதவி வழங்கவேண டும் என்று மக்கள் கோருகின்றனர்.

இதேவேளை, குடிதண்ணீர் பிரச் சினை தொடர்பாக கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடா பாக நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவிக்கிறார். தமக்கு ஒதுக்கப்படும நிதியில் தொகுதி தோறும் பல திட் டங்களுக்கு நிதியை பகிர்ந்து வழங்க வேண்டி இருப்பதனால் குறிப்பிட்ட ஒரு திட்டத்துக்கான நிதியை முழுவது மாக வழங்கமுடியாது எனவும், எனி னும் மக்களின் நலனோடு சம்பந்தப் பட்ட இத்திட்டதிற்கு இயன்றளவு உதவி செய்யத் தயாராக இருப்பதா கவும் தெரிவித்தார். (ஐ-ரி)

## துணை மருத்துவ ஊழியர்களின் வேலை நிறுத்தம் இடைநிறுத்தம்

கொழும்பு,டிசெ.16

அரச வைத்தியசாலைகளிலுள்ள துணை மருத்துவ ஊழியர்கள் மேற் கொண்டிருந்த நாடளாவிய வேலை நிறுத்தம் இடைநிறுத்தப்பட்டது.

இவர்களின் கோரிக்கைகளை மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றித் தர அமைச்சர்கள் உபகுழு இணங்கி யுள்ளதை அடுத்தே வேலை நிறுத் தத்தை இடை நிறுத்துவதெனத் தீர் மானிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு அமைச்சர் கள் உபகுழுவுடன் துணை மருத்துவ ஊழியர்களின் சங்கம் நடத்திய பேச சுக்களின்போது கோரிக்கைகளை நிறைவேற்றித்தர இணங்கப்பட்டதா கத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இன்று முதல் வழமையான சேவைகளில் துணை மருத்துவ ஊழியர்கள் ஈடுபடுவர் எனத தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் மூன்று மாதங்க ளுக்குள் தீர்வு கிடைக்காவிடின் மீண டும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும் என்று சங்கத்தின் செய லாளர் தெரிவித்திருக்கிறார்.

மருநதுக்களஞ்சிய அறைகள உடைக்கப்பட்ட வைத்தியசாலைகளில அது குறித்து விசாரணை நடத்திய பின்னர் வழமையான சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)


**காணி உடன் விற்பனைக்கு உண்டு**

இல.29, செல்லர் வீதி, நல்லூரில் (முத்திரைச்சந்தை யாழ்.வலயக்கல்விப் பணிமனைக்கு அருகில்) 1 1/4 பரப்பு காணி, சிறிய வீடு, கிணறு மற்றும் சுகாதார வசதிகளுடன் உடன் விற்பனைக்குண்டு. பார்வையிட விரும்புபவர்கள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை மாலை 3.00-6.00 மணிக்குள் மட்டும் மேற்படி முகவரியில் தொடர்புகொள்ளவும். (11850)



**விக்னா கல்வி நிறுவனம்** 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

அறிவித்தல்

எமது நிறுவனத்தில் 2002 O/L பரீட்சைக்குத் தோற்றிய பகல்நேர (DAY CLASS) மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்காக (Special English Class - Translation) பதிவுசெய்த மாணவர்கள் தங்கள் பதிவுகளை 18.12.2002 இற்கு முன் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

வகுப்பு ஆரம்பம்: 18.12.02 புதன்கிழமை (8.00, a.m) By S.VISWANATHAN

கு: ஓரளவு ஆங்கில அறிவுடைய புதிய மாணவர்களும் இவ் வகுப்பில் சேரலாம். நிர்வாகி. (C-25421)


## சேவை நலன் பாராட்டு



இன்று 16.12.2002 பதவி ஓய்வுபெறும் எமது ஆசிரியை


திருமதி

**பொன்மணி அருளானந்தம்**

அவர்களின் சிறப்பான சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.
(11853)

## கண்ணீர் அஞ்சலி



திரு.குகதாசன் (இலங்கை மின்சாரசபை - மின் அத்தியட்சகர்) அவர்களின் சிறிய தந்தையார்

**சுப்பிரமணியம்**

*(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், சமாதன நீதிவான்)*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

*இராமநாதர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

S.சுகுமார்
(உரிமையாளர், மிலேனியம் ரெஸ்ரோறென்ற்)
(11855)

## மரண அறிவித்தல்

### செல்வி ஐயாத்துரை ரஞ்சினிதேவி

சாவகச்சேரி, கோவில் குடியிருப்பைச் சேர்ந்த செல்வி ஐயாத்துரை ரஞ்சினிதேவி நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை அகால மரண மடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை (C.T.B) - சுந்தரம் ஆகியோரின் அன்பு மகளும் சேதுகாவலர், வசந்தாதேவி, ராதாகிருஷ்ணன், கந்தசாமி (இந்தியா), சிவலோகநாதன், சிவாஜினிதேவி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி, விமலதாசன், சாரதாதேவி, விஜயமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் விலோஜன், கார்த்திகா, சஜீபன் ஆகியோரின் பெரியதாயாரும் குபேந்தினி, எழிலேந்தினி, மதுசிகான், சிறிலேகா, றோன்சன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கோவில் குடியிருப்பு,*
*கச்சாய் றோட்,*
*சாவகச்சேரி.* (11859)

தகவல்:
தாய்,
சேதுகாவலர் (சகோதரர்)


**CHEMISTRY CENTRE**

83, பலாலி வீதி, கந்தர்மடம்

A/L 2004

அலகு ரீதியான மீட்டலுடன்

"Paper Class"

Basic Chemistry

ஆரம்பம் :- 17.12.2002

Tue. 4 - 5 p.m. (11858)

BY : அன்பழகன்



**கிரீஸ்ரல் சென்ரர்**

நெல்லியடி

நேரமாற்றம்

A/L Day Class மாணவர்களுக்கு 17.12.2002 அன்று திரு.வரதராஜன் ஆசிரியருடைய பொருளியல் வகுப்பு நடைபெறாது. அவ்வகுப்பு 24.12.2002 மு.ப.8.00 மணிக்கு வழமைபோல் நடைபெறும்.

2004 A/L மாணவர்களுக்கு மு.ப. 11.00 மணிக்கு பொருளியல் வகுப்பு நடைபெறும்.

(C-25426) நிர்வாகி.



**கார்கள் விற்பனைக்கு**

மொறிஸ் மைனர் கார், A-40 பரீனாகார் ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- கந்தசாமி
மர, தளபாடவிற்பனையாளர்,
அச்சுவேலி தியேட்டர் முன்பாக.
(C-25425)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
ட்ரகன் CDயில்
பாலா
ITN
பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி.
(C-25428)



**லக்சுமி** இணுவில்.

சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த

**உன்னை நினைத்து**

(ரீலஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே)

இனிய பாடல்கள் நிறைந்தது ([illegible])



**ராஜா** யாழ்ப்பாணம்.

18.12.2002 வரை

**வில்லன்**

(ரீலஸ்)



கா.நே.: 10.30, 2.30

16.12-18.12 வரை

UNIVERSAL SOLDIER (WARFILM). 7 p.m. மட்டும்

(C-2518



**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜய், கௌசல்யா, சூர்யா, மணிவண்ணன் நடித்த

**நேருக்கு நேர்**

(ரீலஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (ப.நே.)


## மரண அறிவித்தல்கள்

### செல்வி நீலோசனி முத்தையா

*(இளைப்பாறிய ஆசிரியை)*

இல.59, ஏ.வி. றோட், அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை செல்வி நீலோசனி முத்தையா நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான கிளறிக்கல் முத்தையா - செல்லம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கமலாசனி கனகசிங்கம், பத்மாசனி இராசையா மற்றும் சதானந்தன் (டாக்டர், லண்டன்), வனசாட்சி தேவதாசன், செல்வி தவமணி, யோகானந்தன் (கணக்காளர், பரிஸ்), கணேசானந்தன் (டாக்டர், அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இல.59,ஏ.வி. றோட்டிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல, 59*
*ஏ.வி.றோட்,*
*அரியாலை.* (11856)

தகவல்:
டாக்டர் கணேசானந்தன்
(சகோதரன்)

### திருமதி இராமசாமி சரஸ்வதி

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராமசாமி சரஸ்வதி 13.12.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமியின் அன்பு மனைவியும் தயாநிதி, சாந்தினி, ஆனந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தசாமி, மயில்வாகனம், பாக்கியம், யோகம் மற்றும் அருமைத்துரை, தனபாலசிங்கம் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், நவராஜா (GTZ சாரதி), பழனிதாசன் (தெல்லிப்பழை தபாற்கந்தோர்), ஜெயந்தி, டக்ஷனி, வியசுதன், கிரு சாயினி, அருள்சுதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டுஷ்யந்தினி, கஜவதனி, நவநீதன், சௌமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வீதி,*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்* (11857)

தகவல்:
மக்கள், மருமக்கள்

### கார்த்திகேசு ஆறுமுகம்

*(சின்னத்துரை, கறுத்தப்பா)*

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் நேற்று (15.12.2002) ஞாயிற் றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நல்லையா, திருமதி அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோகரன், தெய்வேந்திரம்,சிவலிங்கம் (கனடா), கந்தசாமி, சிவசாமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, அன்னலட்சுமி, பாக்கியவதி (கனடா), கலாவல்லி ஆகியோரின் மாமனாரும் மனோகரி, அருன்குமார், திபாகரி, சிவகுமார், மதிவதனி, நந்தினி, உதயகுமார், ஜனனி, சிந்து, துலஷ்சாயினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னைய லேன்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (11854)

தகவல்:
ஆ.மனோகரன் (மகன்)

### தனுக்கோடி புண்ணியமூர்த்தி

*(ஓய்வுபெற்ற அரச மருந்தாளர்)*

தனுக்கோடி புண்ணியமூர்த்தி (ஓய்வுபெற்ற அரச மருந்தாளர்) 13.12.2002 வெள்ளிக்கிழமை காலஞ்சென்ற எமது தந்தையாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

*19/1, மலர்மகள் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பு.சண்முகதாசன்
(விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி,யாழ்ப்பாணம்.)
பு.தேவகரன்
(D.P.D.HS.,யாழ்ப்பாணம்)
(11851)

### திருமதி செல்லம்மா சின்னத்தம்பி

கட்டுவன் வீதி, தொந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்தம்பி நேற்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2002) திங்கட்கிழமை பி.பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக சப்பட்டியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுவன் வீதி,*
*தொந்தனை,*
*மல்லாகம்.* (11846)

தகவல்:
க.பாலரத்தினம்
(மருமகன்-பாலன் ஸ்ரோர்ஸ்,துர்க்காபுரம், தெல்லிப்பழை.)

# விமானிகளுக்கு பயிற்சி அளிக்க 4விமானங்களை அரசு வாங்கும்

விமானப் படையில் விமானிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

விமானப் படைக்கு 200 விமானிகள் தேவைப்படுகின்றனர். 125 விமானிகளே தற்சமயம் சேவையாற்றுகின்றனர். தற்போதைய காலகட்டத்தில் இந்த 125 விமானிகளுடன் நிலைமையைப் பூர்த்தி செய்ய முடியும் என்றாலும் அவசர தேவை ஏற்படும் காலத்தில் மேலதிக விமானிகள் தேவைப்படுவார்கள் என்றும் விமானப்படைத் தளபதி தெரிவித்திருக்கிறார்.

விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கென பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கென அடுத்தவருடம் நான்கு விமானங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன- என்றும் அவர் குறிப்பிட்டார்.



வன்னிப் பகுதியில் மீட்கப்பட்ட வெடிப்பொருள்கள் கடந்த சனிக்கிழமை ராஜன் குளம் பெரிய கூழாவடியில் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் அழித்தொழிக்கப்பட்டன. அவற்றில் ஒரு தொகுதி வெடிப்பொருள்களையே படத்தில் காண்கின்றீர்கள்.

## மயிலந்தனை படுகொலை வழக்கு தீர்ப்பு:

# மேன்முறையீடு செய்து நீதித்துறையை நியாயப்படுத்த ஜோசப் கோரிக்கை!

மட்டக்களப்பு,டிசெ.16

மட்டக்களப்பு - மயிலியந்தனைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 24 இராணுவ வீரர்களில் மேல் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 18 பேரும் நிரபராதிகள் என ஜூரர்கள் சபையின் ஏகமனதான முடிவுப்படி கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய விடுதலைத் தீர்புக்கு எதிராக மேன்முறையீடு செய்து இலங்கையின் நீதித்துறையை நியாயப்படுத்த வேண்டும், தவறும் பட்சத்தில் வடக்கு - கிழக்கில் இயங்குகின்ற விடுதலைப் புலிகளின் நீதிமன்றங்களைத் தாங்களே அங்கீகரிப்பதாக அமையும்.

- இவ்வாறு மயிலியந்தனைப் படுகொலைத் தீர்ப்பு தொடர்பாக அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு சட்டமா அதிபர் சி.கமலசபேசனுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1992-08-08 ஆம் திகதி மயிலியந்தனையில் 14 சிறுவர்கள் உட்பட 35 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இக்கொலைக்கு இராணுவத்தினரே பொறுப்பு என 24 இராணுவ வீரர்களை பொதுமக்கள் அடையாள அணிவகுப்பு மூலம் இனங்காட்டினர்.

மட்டக்களப்பு, பொலன்னறுவை நீதிவான் நீதிமன்றங்களிலும், கொழும்பு மேல்நீதிமன்றத்திலும் கடந்த பத்து வருடங்களாக வழக்கு விசாரணை செய்யப்பட்டு அண்மையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விசாரணைகளின முடிவில் ஜூரர்கள் சபை எதிரிகள், நிரபராதிகள் எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரியும் இத்தீர்பினை ஏற்க மறுத்த நீதிபதி, மீள் பரிசீலனை செய்யுமாறு கோரினார். மீண்டும் ஜூரர்கள் சபையினால் அதே தீர்மானமே மேற்கொள்ளப்பட்டது. நீதிபதி ஏற்றுக் கொண்டு தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

ஜூரர்கள் சகலரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே, இத்தீர்புக்கு எதிராக தாங்கள் மட்டுமே மேன்முறையீடு செய்யலாம். எனவே, நாட்டின் நீதித்துறையை நியாயப்படுத்தவும் அதே நேரத்தில் தங்கள் திணைக்களத்தின் பெருமையைக் காப்பாற்றவும் உடனடியாக மேன்முறையீடு செய்து குற்றவாளிகளைத் தண்டிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# பேரம் பேசக்கூடிய சக்தி, வலிமை முஸ்லிம் காங்கிரஸிடமே உள்ளது

மட்டக்களப்பு,டிசெ.16

"முஸ்லிம் சமூகம் தனித்தேசிய இனம். எமக்கான உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர். இருந்தபோதும் தற்போது பேரம் பேசக்கூடிய சக்தி, வலிமை முஸ்லிம் காங்கிரஸிடமே உள்ளது."

என்று தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சமாதானத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பிடமே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

ஊடகவியலாளர்களிடம் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் அஷ்ரப்பின் மரணம் கடந்த அரசின் காலத்தில் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு கொலை. இக்கொலை தொடர்பாக என்ன நியாயம் கூறினாலும் அதனை முஸ்லிம் சமூகம் ஏற்காது.

அதேவேளை, நோர்வே அரசு முஸ்லிம்களுக்குத் துரோகம் இழைத்ததாகவே வரலாறு உண்டு. எனவே, நாம் நோர்வே அரசையும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் நம்பத் தயாராக இல்லை. நாம் கடந்த காலங்களில் தற்காப்புக்காக ஆயுதங்களைக் கையாண்டுள்ளோம். எந்தவொரு பெயருடைய ஆயுதக்குழுவும் எம்மிடம் இல்லை. புலிகள் எமக்கு பல்வேறு தீங்குகளை இழைத்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தங்களிடம் தெரிவித்த கருத்துக்களை தென்பகுதி மக்களுக்கும், உரியவர்களுக்கும் தெரிவிப்பதாக ஊடகவியலாளர்கள் பல்கலைக்கழக மாணவர்களிடம் தெரிவித்தனர்.

# கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களுக்கு நிவாரண உதவி

அரியாலை,டிசெ.16

நீர்வேலியில் முன்பு இயங்கிய கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு நிவாரண ஊக்குவிப்பு உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உறுதியளித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலி சனசமூகநிலைய மண்டபத்தில் இடம்பெற்ற ஊழியர்களுடனான சந்திப்பின்போது அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை இராணுவ நடவடிக்கைகளால் கடந்த 1987 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்காமல் உள்ளது. இதனால், இந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தனர். எந்தவித நிவாரண உதவிகளோ, நஷ்டஈடோ இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கோப்பாய் பிரதேசசெயலர், கிராமசேவையாளர்கள் மற்றும் இப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-17)

## ஆயுதக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

• இந்தக் கப்பலில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிவரப்பட்டிருக்கலாம் என்று கடற்படையினர் சந்தேகிப்பதாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

இச்சம்பவத்தை அடுத்து விமானப்படையின் உதவியுடன் கடற்படையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்த மர்மக் கப்பல் தொடர்பான தகவல்களை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றும் நேற்று வெளியிட்டிருக்கிறது. (ஐ-9)

## முதலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 'யுத்தமா? அபிவிருத்தியா? - என்பதைத் தீர்மானிக்கும் கட்டம் வந்துவிட்டது' என்று கூறியிருப்பது குறித்து தமிழ்ச்செல்வனிடம் வினவப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது:-

இன்றுள்ள யதார்த்த நிலையை பிரத ரணில் விக்கிரமசிங்கதான் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு எட்டப்படும் தீர்வுதான் நாட்டின் அபிவிருத்திக்கு வழி செய்யும் என்பது உண்மை.

இந்த விடயத்தில் பிரதமரின் கருத்தில் பொதிந்துள்ள அர்த்தங்களை அனைத்த மக்களும் - சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் - புரிந்து கொண்டு விரைந்து தீர்வுகாணத் தமது உதவியை வழங்கவேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களும் இம்முயற்சிக்கு தங்களது முழு ஒத்துழைப்பை வழங்குவது கடமை என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட முன்வரவேண்டும் - என்றார் தமிழ்ச்செல்வன். (ஐ-3-8)

## உடனடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக் கணக்குகளை கணக்காய்வு செய்யும் சர்வதேச கணக்காய்வு நிறுவனத்தை நியமித்தல், அதற்கான கட்டமைப்பு, மாவட்ட மட்டத்தில் குழுக்களை அமைத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக நேற்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்டுள்ளன.

பேச்சுக்கள் இன்றும் தொடர்ந்து இடம்பெறும்.

இன்று காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் -

பேச்சுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நண்பகலுக்குப் பின்னர் வெளியிடப்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-8)

# மாத்தளையில் விமரிசையாக நடைபெற்ற கும்பாபிஷேகம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நேற்றுக்காலை மிக விமரிசையாக நடைபெற்றது. தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சிவானந்த குருக்கள் மற்றும் விஸ்வநாராயணக் குருக்கள் தலைமையில் சுமார் 30 சிவாச்சாரியர்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கும்பாபிஷேகத்திற்கு வருகை தந்திருந்தனர். பௌத்த பிக்குகள் உட்பட பெருந்திரளான சிங்கள மக்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# கோப்பாயில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - அல்வாய் மனோகரா வி.க. அணி எதிர் இளவாலை இளஞ்சுடர் வி.க. அணி.

★ பிற்பகல் 4.30 மணி - கோப்பாய் ஐக்கிய வி.க அணி எதிர் பொற்பதி வி.க. 'ஏ' அணி. (ஒ-5)


IELTS

International English Language Testing System

வெளிநாடுகளில் உயர்கல்வியை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களிடம் தூதரக அதிகாரிகளினால் முதலில் கேட்கப்படும் கேள்வி

" நீர் IELTS முடித்துள்ளீரா? "

யாழ் மாவட்டத்தில் முதன்முறையாக முக்கியத்துவம் வாய்ந்த இவ் ஆங்கிலப்பயிற்சி நெறி உங்கள் அபிமான நிறுவனமான

HS இல் January முதல் வாரத்தில் இருந்து......

மேலதிக விபரங்கள் (23.12.2002) உதயனில்.

NEW SCIENCE CENTRE

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களுடன் இலங்கையின் முன்னணி உயிரியல் ஆசிரியர் S.P.நாகநாதன்

இணைந்து

A/L 2005

கணித/விஞ்ஞான பிரிவு

ஆரம்பம் :19.12.2002

வியாழன் 9.00 a.m.

BIO. { திரு. S.P.நாகநாதன் / திரு. தற்பரன்

CHE. -திரு. அன்பழகன் (அன்பு)

PHY. { திரு. சிவலிங்கம் / திரு. சந்திரப்பிரகாஸ்

C.MAT. { திரு. பிரதீபன் / திரு. குமுக்கேசன்

(11828)

எமது புதிய வெளியீடு

☆ ஆர்யா நடித்த

மௌனம் பேசியது

ஷியாம், ரகுவரன் நடித்த

பாலா

☆ ரகுமான் நடித்த

போர் முழக்கம்

பிரதிகள் உடன் பெறலாம்

(C/25129)

வீடியோ சிந்து

உரும்பிராய் சந்தி

வெளிவந்துவிட்டது!

"அஷ்டலக்ஷ்மி" தினத்தாள்

கலண்டருடன் 12 இராசிகளுக்குமான 2003 ஆம் ஆண்டு புத்தாண்டு பலன் புத்தகம் இலவசம்!

கலண்டர் விலை ரூபா 170/-

✦ மேசை தினக்குறிப்பு / ✦ Pocket Diary } தமிழில்

என்பனவும் கிடைக்கும்.

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம

கண்டி வீதி, கைதடி.

ஈசன் கல்வி நிலையம்

இரசாயனவியல்

A/L 2005

திரு. வே.அன்பழகன்

ஆரம்பம் : இன்று (16.12.2002)

Mon 4.00 p.m.

(11823)

O/L

எடுத்தவர்களுக்கான

புதிய பிரிவுகள்

ஆரம்பம் :

25-12-2002

OXFORD ENGLISH ACADEMY

P.K.Lane - Pointpedro

ஆரம்பம்

காலை 10 மணி

By: Mr. B.JOTHY

நெல்லியடியில்

காலை 11.15 மணிக்கு

(அனுமதியை

MATHS CENTRE

இல் பெறவும்)

(11838)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.